# சாளரம்

இளையோர் திங்கள் இதழ்
யூலை 1992
விலை 12 ரூபா



## தளிரே...!

கருவறைவிட்டு வந்ததுமே
இருப்பை தொலையவிட்டாயோ!
பறக்கும் முன்னமே உன்
சிறகை அறுத்தவர்
யார்?
தேசமே ஓர்
திறந்த வெளிச் சிறையானதா?
அலைக்கழிக்கும்
இவ்வுலகை
அசைப்போம் வா!

## சாளரம்


வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

## உள்ளே...


- ☐ சிறுகதை
- ☐ இரட்டை ஒற்றர்கள்
- ☐ பேட்டி
- ☐ நிலாமுற்றம்
- ☐ நிறத்தை நாம் எப்படி பகுத்தறிகிறோம்
- ☐ வாத்தியார் வீட்டு விறாந்தை
- ☐ தீர்வுகாணும் நம்பிக்கையை குழந்தைகளிடம் வளர விடுங்கள்
- ☐ இருட்டு
- ☐ தென்றலாக மாறவுள்ள சுற்றுச்சூழல்
- ☐ உயிரே உனக்காக
- ☐ பொது அறிவுப்போட்டிகள் ஏன் அவசியம்
- ☐ விட்டமின் மருந்துகள் கூடினால் ஏற்படும் விளைவுகள்
- ☐ உலகத்திரைவானில் ஒளிரும் தாரகை
- ☐ ராஜீவ் கொலைவழக்கு விசாரணை - மக்களின் செவிகள் ஏன் மூடப்பட்டன?
- ☐ பகலவன் பதில்கள்
- ☐ அருப்புகள்
- ☐ ஆசிரிய தலையங்கம்

# செல்வி என்ன செய்வாள்...

இருளும், சூரிய கதிர்களும் ஒன்றோடொன்று போராடி சூரிய கதிர்கள் வெற்றியுடன் வெளிப் பட்டுக் கொண்டிருந்த அந்த அதி காலை வேளையில் செல்வி எழுந்து படிக்கத்தொடங்கி விட்டாள்.



''செல்வி, செல்வி ......''

அம்மாவின் சத்தம் கேட்டதும் செல்விக்கு விளங்கிவிட்டது.

''என்னம்மா?

நெடுக இப்பிடித்தான். கொஞ்ச மெண்டாலும் படிக்கவிடுங்கோ வன்'' சோதினைக்கு இன்னும் ஒரு கிழமைதான் இருக்கு.

''நான் சாலமச் சாப்பாடு செய் யோணும். தேத்தண்ணிய ஊத்திப் போட்டு இஞ்ச வந்து வேலையைப் பார்''

''நல்ல படிப்புத்தான் படிக்கிற படிச்சுப் படிச்சு நீ என்ன செய் யப் போற ஒழுங்கா இதைச் செய் தாலாவது பிரியோசனமாயிருக்கும் பொம்பிளையளுக்கு இப்ப என்ன படிப்பு வேண்டியிருக்கு.''

அம்மாவின் சத்தத்தில் செல்விக்கு தலையில் இடிவிழுந்தது போல ஒரு பிரமை

அவள் திருப்பிக் கதைக்கத் தெரி யாதவள்.

அப்படி அவள் வளர்க்கப்பட்டு விட்டாள்.

—இளந்திரையன்—

''சரி சரி சத்தம் போடாதையண''

அவள் உடன்பட்டு அவளது வேலைகள் முடிந்ததும்... இல்லை மிகுதியும் இன்னும் இருந்தது.

செல்வி வெளிக்கிட்டாள். அப் போது தான்-

''பிள்ளையள் நாளைக்கு எல்லா ரும் புளூ சூ போட்டுக்கொண்டு வந்திடுங்கோ!''

வாத்தியார் சொன்னது நினை வுக்கு வந்தது.

''மற்றப் பிள்ளையள் எல்லாம் சப்பாத்து நல்ல வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டு வரு வினம்.

நான் தான் இந்தச் சட்டை யோட......

அவள் மனம் வேதனையாகத் தான் இருந்தது.

''ஐயோ நேரம் போட்டுது

இனி உந்த நாலு மைல் தூரம் நடக்கிறதெண்டா சீவனும் போயி டும்'' என்று கூறியவாறே அவள்




மீது திணிக்கப்பட்டிருந்த அந்த வரலாற்றுத்திரிபுப் புத்தகங்களை யும், ஏனைய, புத்தகங்களையும், கொப்பிகளையும் வாரி அள்ளிக் கொண்டு பாடசாலை நோக்கி ஓடினாள்.

❀ ❀ ❀

''சேர் அம்மாவுக்கு வருத்தம் அதுதான் ...... ''

'நீர் என்ன நேரத்துக்கு வேலையை முடிச்சிட்டு வரத்தெரி யாதோ பள்ளிக்கூடமெண்டா ஒரு கட்டுப்பாடு இருக்கோணும். ஒண் டுஞ் செய்யேலாது நீர் வீட்ட திரும்பிப் போம்''

வாத்தியாரின் பதிலைக் கேட்ட செல்விக்கு அழுகை வந்தது. அடக் கிக் கொண்டாள். மனம் தான் பொறுக்குமா?

''சீ... பெடியளெல்லாம் பாத்துச் சிரிக்கிறாங்கள்''

என்று மனதில் கூறி அழுதபடியே மெல்ல வீட்டை நோக்கி அடியெடுத்து வைத்தாள்.

''ஹலோ செல்வி எப்பிடி சுகம்? எங்க போறீர்?''

''கொண்டு போய் விட்டு விடுறதோ?''

திரும்பிய செல்வி ஒருகணம் எரிக்கும் பார்வை பார்த்துவிட்டு விரைந்தாள்.

'இந்த மோகனோட பெரிய கரைச்சலா இருக்குது

பின்னாலயே சுத்துறான்.

றோட்டில உதுகளுக்கு வேற என்ன வேலை,

என்று முணுமுணுத்தவாறே தொடர்ந்து நடந்தாள். அவள் ஞாபகம் அடுத்த கிழமை சோதனையில் தான்.

❁

'அம்மா ... அம்மா ...'

''என்ன செல்வி இண்டைக்குப் பள்ளிக்கூடம் இல்லையோ''

''நேரஞ்செண்டு போச்சுது''

என்று பல்லைக் கடித்தவாறே சொற்களை வெளிவிட்டாள்.

''உனக்கு கெதியா நடந்து போகத் தெரியாது. ஆட்டம்போட்டுக் கொண்டு போறது''

செல்விக்கு இந்த அனுபவம் இன்று மட்டுமல்ல.

''செல்வி வா மத்தியானம் கெதியா சாப்பாட்டை முடிச்சிடோணும் கோயிலுக்கும் போகக் கிடக்கு''

செல்வி அடிக்கடி 'கொம்பியூட்டரை' கற்பனை செய்வதுண்டு.

❁

''அம்மா நான் சாப்பிட்டுப் போட்டு ரியூசன்போகப்போறன்''

''பிள்ள இஞ்ச வீட்டில ஆக்கவில்லை. நானும் கொப்பரும் கோயிலுக்குப் போகோணும் எவ்வளவு சாமான் கிடக்குது! ஆரும் கண்டாலும் பிரச்சினையாய் போகும்.''

என்ன செய்யிறது. என்ர படிப்பும் போச்சுதெண்டு பாத்தா வீட்டில நிம்மதியாவும் இருக்கேலாதாம். நானும் இப்படி எத்தினை நாளைக்கு ........

மனதுக்குள்தான் நினைத்துக் கொண்டாள்.

❁

அந்த வீடு வெறிச்சோடிப் போய்க் கிடந்தது.

செல்வியின் மனத்தைப் போலவே, வீதியைப் பறிகொடுத்தவள்போல் பார்த்து நின்றாள். அவளின் சினேகிதி ரியூசன் முடிந்து சைக்கிளில் வீடு நோக்கி விரைகிறாள்.

''வேணி''

என்று அவளைக் கைதட்டி அழைத்தாள்.

''இண்டைக்கு என்னடி படிச்சனியள்''

''அங்க என்ன X + Y யும் Y — X உதுகள் தான் என்னசெய்யிறது சோதினையடி, அதை முதல்ல பாஸ்பண்ண வேணும்''

''சரியடி வேணி நான் போட்டு வாறன்''

அவளோடு சேர்ந்து வீதிமட்டும் செல்வி கதைத்தவாறு சென்று அவளை வழியனுப்பிவிட்டாள்.

வேணி போகவும் செல்வியின் அம்மாவும், அப்பாவும் வர சரியாக இருந்தது.

''என்னபிள்ளை இதில நிக்கிறவாவன்''

செல்வி திரும்பி வீட்டைப்பார்த்தாள்.

சாதுவாக இருள் கவிந்துகொண்டிருந்தது.

செல்விக்கு வீடு இருண்டு போய் தான் கிடந்தது.

❁

இருளும் சூரியகதிர்களும் ஒன்றோடொன்று போராடி சூரிய கதிர்கள் வெற்றியுடன் வெளிப்பட்டுக்கொண்டிருந்த அந்த அதிகாலை வேளையில்

செல்வி எழுந்து ஏதோ யோசிக்கிறாள்.

புத்தகம் பிரம்புக்கூடைக்குள் புரண்டுபோய்க் கிடந்தது.

''செல்வி...... செல்வி......''

அம்மாவின் சத்தம் கேட்டது ...

❁

ஒருவன் தொடர்ந்து வெற்றி பெறுகிறான் என்றால், உண்மையில் அவனிடம் அப்படி என்ன சிறப்பு அம்சங்கள் உள்ளன? திட உறுதி, துணிவு, தளர்ச்சியின்மை இம்மூன்றும் அவனிடமிருந்து விலகாமலிருப்பதால் தான் அவனுக்கு எதுவும் தோல்வியில் முடிவதில்லை.

-ஒ டி. றிக்வெட்டி

# 'இரட்டை ஒற்றர்கள்!'

ஒரு நாட்டைப்பற்றிய இராணுவ இரகசியங்களை அறிய வேண்டுமானால் அந்த நாட்டிற்கு சில உளவாளிகளை அனுப்புவார்கள். இவர்கள் அந்த நாட்டில் பெரிய அல்லது சிறிய புள்ளிகளுடன் தொடர்பு கொண்டு இரகசியங்களைத் தெரிந்து கொண்டு விடுவார்கள். இப்படி உளவாளிகளை அனுப்பும் பழக்கம் இரண்டாவது உலகப்போரில் மிக அதிகமாகி விட்டது.

போர் நடக்கும் போது, எதிரியிடம் என்னென்ன ஆயுதங்கள் இருக்கின்றன, இராணுவ பலம் என்ன, என்னவெல்லாம் செய்யப் போகிறார்கள் என்பதைப் போன்ற இரகசியங்களை உளவாளிகள் கண்டு பிடித்து தெரிவித்து விடுவார்கள். எதிரியின் பலத்தைத் தெரிந்து கொண்டு அதற்கு ஏற்றபடி தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவே ஒவ்வொரு நாடும் விரும்பும்.

போர் இல்லாத நாட்களில் கூட உளவாளிகள் நடமாட்டம் குறைவதில்லை. இராணுவ இரகசியங்கள் மட்டுமின்றி பொருளாதாரத் துறையில் என்னென்ன மாற்றங்கள் செய்கிறார்கள், ஒரு நாட்டில் என்னமாதிரியான முன்னேற்றங்கள் ஏற்படுகின்றன, என்பதையும் இந்த உளவாளிகள் கண்டுபிடித்து விடுவார்கள்.

வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் ஒவ்வோர் உளவாளியும் தமது தாய் நாட்டுக்கு நூற்றுக்கு நூறு கடமைப்பட்டவர்களாகவே இருப்பார்கள். அவர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால் கூட தாய் நாட்டைப்பற்றிய உண்மைகளைச் சொல்லமாட்டார்கள். எத்தனையோ உளவாளிகள் எதிரிகளிடம் சிக்கியதும் ஏதோவொரு வழியில் தற்கொலை செய்து கொள்வதும் உண்டு. அந்த அளவு தாய்நாட்டிற்கு விசுவாசமாக இவர்கள் இருப்பார்கள்.

ஆனால் ஒரு சில ஒற்றர்கள் பெரும் பணத்திற்கு ஆசைப்பட்டு 'இரட்டை ஒற்றர்களாக (டபிள் ஏஜெண்ட்) பணி புரிவதும் உண்டு. அதாவது ஓர் ஒற்றர் அவர் வாழும் நாட்டின் தலை சிறந்த உளவாளியாக இருப்பார். அசைக்க முடியாத நம்பிக்கை அவர் மீது அரசாங்கத்திற்கு இருக்கும். அவர் வெளி நாட்டில் துப்பறிந்து பல அரிய உண்மைகளைக் கண்டு பிடித்து விடுவார் அவர் கண்டுபிடித்துவிடும் உண்மைகள் நூற்றுக்கு நூறு சரியாக இருக்கும். அதே நேரத்தில் அவர் உளவறிந்த நாட்டுக்குத் தமது தாய் நாட்டைப்பற்றிய இரகசியங்களையும் விற்று விடுவார். இதனால் பெருந்தொகைப் பணம் கிடைக்கும்.

இந்தியாவில் இப்படியொரு 'இரட்டை ஒற்றர்' அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டார். 40 வயதான பல்வீந்தர் சிங் எனப்படும் சீக்கியரே இவராவார். மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் எனக் கருதப்பட்டவர். இந்தியாவிலிருந்து அடிக்கடி பாகிஸ்தானுக்கு சென்று (இந்திய உளவு நிறுவனத்தின் அனுமதியுடன்) பல இரகசியங்களைக் கொண்டு வந்திருக்கிறார். இந்திய உளவு நிறுவனம் இவருக்கு எக்கச்சக்கமான கௌரவங்களைக் கொடுத்துப் பாராட்டியது. இவர் நாளடைவில் பாகிஸ்தானின் உளவாளியாக மாறி தாய் நாட்டின் பல இரகசியங்களை பாகிஸ்தானிற்கு வழங்கியிருக்கிறார். இந்த பல்வீந்தர் சிங் சுமார் பதினெட்டு ஆண்டுகளாக இந்திய இராணுவ இரகசியங்களை பாகிஸ்தானுக்கு வழங்கினார் என கருதப்படுகிறது.

இந்திய உளவு நிறுவனத்தில் சம்பளம் பெற்றுக் கொண்டு பாகிஸ்தானிடமும் பெருந்தொகை பணத்தை இவர் வாங்கி வந்துள்ளார்.

இந்திய இராணுவத்திடம் என்னென்ன ஆயுதங்கள் இருக்கின்றன, எங்கெல்லாம் இராணுவம் நிலை கொண்டுள்ளது. எதிர் கால இராணுவத் திட்டங்கள் என்ன, என்பன பாதுகாப்பு இலாகாவில் இருக்கும் பல பெரிய அதிகாரிக்குக் கூட தெரியாத விடத்தில் பாகிஸ்தானுக்கு அவை தெரிந்திருந்தது. இந்தியாவின் பலத்தைக் குலைக்கும் வகையில் திட்டமிட்டு பாகிஸ்தான் அமெரிக்காவிடம் புதிய ஆயுதங்களையும் ஆற்றல் மிகுந்த விமானங்களையும் வாங்கியது என்றெல்லாம் இப்போது ஆராயப்பட்டுள்ளது.

- இந்து

□ □

சொல்லால், செயலால், தந்திரத்தால் ஏமாற்றி பிறருக்கு மனசாட்சிக்கு விரோதமாக எதனையும் செய்யாமல் இருப்பதே நேர்மை நேர்மையான முயற்சியில் கிடைத்த வெற்றியினால் ஏற்படும் மகிழ்ச்சியின் சிகரத்தை யாரும் அளக்கவே முடியாது.

-ஜேர்ஸ் ஆலன்

□ □

# பாடசாலைகள் தகர்க்கப்பட்டதால் வீடுகளில் வைத்துப் பாடங்கள் போதிக்கப்படுகின்றன

**● முல்லைத்தீவு மாவட்டத்தின் கல்வி நிலை பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவ தாக்குதல்களால் பல பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அங்கு இப்போதும் வானூர்தி தாக்குதல்கள் இடம் பெறுகின்றன. இதன் காரணமாக கல்வி நிலையிலும் பலவித பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அடிக்கடி ஊரடங்கு அறிவித்தலும் வானூர்தி தாக்குதல்களும் அங்கு வழக்கமான விடயமாகிவிட்டது. இதனால், மாணவர்கள் பாடசாலைக்கு வருவதில் மிகுந்த அச்சம் கொண்டுள்ளனர். ஆனால் ஊரடங்கு வேளைகளிலும் நாம் பாடசாலைகளை நடாத்துகிறோம்.

மணலாறில் செம்மலை, அலம்பில், குமுழமுனை ஆகிய ஊர்களிலுள்ள பாடசாலைகள் குண்டு வீச்சினால் தகர்க்கப்பட்டுள்ளன. அப்பகுதிகளில் வீடுகளில் வைத்தே கல்வி புகட்டப்படுகிறது.

பாடசாலைகளை நோக்கி தாக்குதல்கள் நடப்பதால் ஆசிரியர்களும் அச்சத்துடனேயே கடமையாற்றவேண்டியிருக்கிறது.

அத்துடன், போக்கு வரத்து சீரின்மை காரணமாக அதிகாரிகள் பாடசாலைகளை அடிக்கடி சென்று கண்காணிக்க முடியாமலும் உள்ளது.

**● முல்லை மாவட்டத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களில் அதிகமானோர் அம்மாவட்டத்தைச் சேர்ந்தவர்களா?**

சுமார் முப்பதுவீதமானோர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் மிகுதிப் பேர் அம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்தாம்.

**● பாடசாலைகளில் ஆசிரியர் மாணவர் வரவுகள் எவ்வாறு உள்ளன?**

இம்மாவட்டத்தில் சுமார் 27000 மாணவர்கள் படிக்கிறார்கள். இவர்களில் 24000 பேர். அம்மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள். மிகுதி 3000 பேர் வேறு இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள்.

> முல்லைத்தீவு பிரதேச கல்விப்பணிப்பாளரும் எழுத்தாளருமான திரு. வே. சுப்பிரமணியம் (முல்லைமணி) அவர்களை சாளரம் சார்பில் சந்தித்தோம்.
>
> சாளரத்திற்கென அவர் வழங்கிய செவ்வி இங்கு பிரசுரமாகிறது.

எமக்கு கிட்டத்தட்ட 1100 ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள். ஆனால், 646 ஆசிரியர்களே தற்போது இருக்கின்றனர். கடந்த வருட யூன் மாதத்தில் 853 பேர் இருந்தனர். இப்போது அந்த எண்ணிக்கையும் குறைந்துவிட்டது.

**● அவர்கள் எவ்வாறு குறைந்து போனார்கள்?**

சிலர் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். சிலர் கொழும்பு சென்று அங்குள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக படிப்பிக்கின்றார்கள்.

**● இம்முறை க. பொ. த (சாதாரணம்) பரீட்சை முடிவுகள் இம்மாவட்டத்தில் எவ்வாறுள்ளது?**

மிகக் குறைந்த பெறுபேறுகளே கிடைத்துள்ளன.

**● சரி. யாழ்ப்பாணத்தைப் போன்று அந்த மாணவர்களும் கல்வியில் ஆர்வம் கொண்டுள்ளனரா?**

யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்கும் இதில் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. இங்குள்ள ஓரளவு படித்த பெற்றோர் தங்களது பிள்ளைகள் படித்து நல்ல நிலைக்கு வரவேண்டுமென்று ஆர்வம் கொண்டுள்ளனர். பெற்றோரின் ஊக்குவிப்பு காரணமாக பிள்ளைகளும் படிப்பில் ஆர்வம் காட்டுகின்றார்கள். பெரும்பான்மையான பெற்றோர் கல்வி குறைந்த விவசாயிகளாக இருப்பதால்பிள்ளைகளுக்கு தூண்டுதல் கிடைப்பதில்லை. உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம். வற்றாப்பளை என்னும் ஊரிலுள்ள பாடசாலையில் 500 மாணவர்கள் பயிலுகின்றனர். இப்பகுதியில் உழுந்து அறுவடை செய்யும் காலங்களில் 200 பேருக்கும் குறைவானவர்களே பாடசாலைக்கு வருகின்றனர். மிகுதிப் பேர் அறுவடை வேலைகளுக்குச் சென்று விடுகின்றனர். இவ்வாறான நிலைமைகளும் மாணவர்கள் தொடர்ச்சியான கல்வியைப் பெற்றுக்கொள்ளத் தடையாகவுள்ளன.

மற்றது, யாழ்ப்பாணத்தைப் போல தனியார் கல்வி நிலையங்கள் அதிகம் இல்லாத காரணத்தினாலும் மாணவர்கள் முனைப்புடன் கல்வி கற்க வாய்ப்புகள் கிடைப்பதில்லை.

● அப்படியானால் தனியார் கல்வி நிலையங்கள் அவசியம் என்று தாங்கள் கருதுகிறீர்களா? அதனை வரவேற்கிறீர்களா?


உண்மையில் என்னுடைய கருத்து என்னவென்றால் கல்விக்கு அடிப்படை பாடசாலைகள் தாம். பரீட்சைக்கான ஓர் தயாரிப்பு வேலையை செய்யும் நிறுவனமாகவே தனியார் கல்வி நிலையங்கள் இயங்குகின்றன. வியாபார நோக்கும் அதில் உள்ளது. பாடங்களை கற்பிப்பது மட்டுமல்லாமல் சுயசிந்தனையாற்றல்களையும் பாடசாலைகள் மூலமாகவே வளர்க்க முடியும். தனியார் கல்வி நிலையங்கள் சுயமாக சிந்திக்கும் தன்மையைத் தடுக்கின்றன.

ஆனால், வன்னிப்பகுதியை எடுத்துக் கொண்டால் மாணவர்களுக்கு முழுமையாகவும், முறையாகவும் கல்வியினை அளிப்பதற்கு போதிய வசதியின்மைகளும் இடையூறுகளும் அதிகம் காணப்படுவதால் தனியார் கல்வியின் உதவியை மாணவர்கள் நாடவேண்டிய தேவையொன்றுள்ளது. இச் சூழ்நிலையில் தனியார் கல்வி நிலையங்கள் ஒரு 'தேவையான தீமை' என்றே நான் கருதுகிறேன்.

● தற்போதைய கல்வி முறை சரியானது என்று தாங்கள் கருதுகிறீர்களா?

இல்லை. இப்போது கல்வியின் வளர்ச்சி என்பது பரீட்சையை நோக்கியதாகவே உள்ளது. மாணவர்களுக்கு சுயமான சிந்தனையைத் தூண்டுவதாக இது இல்லை. மாணவர்களின் சிந்தனையாற்றல் இப்போது குறைவானதாகவேயுள்ளது. சிந்திக்க அவர்களுக்கு நேரமும் இல்லை. நாம் அவர்களை சிந்திக்க விடுவதும் இல்லை. காரணம் நாம் போதனைக் கல்வியையே அதிகமாகச் செய்கிறோம். செயன்முறைக் கல்வியே (தொழிற்கல்வி) தற்போது எமது நாட்டிற்கு அவசியமானது என்பது எனது கருத்து. தொழிலை மையமாகக் கொண்டே தொழிலுடன் சேர்த்து பாடங்களைப் போதிக்க வேண்டும். எமது கல்வி வெறும் ஏட்டுப்படிப்பாகவே உள்ளது. வளர்ந்து வரும் ஒரு நாட்டிற்கு தொழிற் கல்வியே அவசியம் தேவை. □

## குறள் வெள்ளம்



### எண்ணம் நிறைவேறுமா?

நீங்கள் எண்ணிய கருமம் உங்கள் தகுதிக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம். உங்கள் சக்தியால் சாதிக்க முடியாத அளவுக்கு பாரியதாக இருக்கலாம்.

பொருத்தமான கால நேரம் அமையும் போது, பொருத்தமான வழிகளால் தகுந்த இடத்தில் அக் கருமத்தை செய்யத் துணிந்தால் அது இலகுவாக நிறைவேறிவிடும்.

எனவேதான் பெரிய திட்டங்களை மனதிலே கொண்டிருப்பவர்கள் அமைதியாக? ஆரவாரமில்லாமல் காத்திருக்கிறார்கள். இவர்கள் உலகினையே வெல்லும் சக்தி படைத்தவர்கள்.

காலம் கனியும்போது இவர்களின் முயற்சி பலன் தருகிறது. அனைவரும் வியக்கும் வகையில் இவர்கள் வெற்றிகளைக் குவிக்கிறார்கள்.

''ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்'' - 0484

''காலம் கருதி இருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்''
- 0485

(காலமறிதல்)

## கசப்பு உணவின் மகிமை

உலகில் வாழும் மனிதர்களில் பெரும்பாலோர் கசப்பு உருசியுடைய உணவு வகைகளை உண்ணாமல் விட்டு விடுகின்ற படியால், அவரவர் வீடுகளிலும் கசப்புக்குரிய காய்கறி, கீரை வகைகளைச் சமைப்பதே இல்லை. நோய்களுக்கெல்லாம் மூலகாரணம் உணவில் கசப்புச்சுவை கலந்துண்ணாமையே ஆகும்.

இதனால் ஒவ்வொரு குடும்பத்திலும் எல்லா நபர்களும் உழைக்க முடியாமல் போய்விடுகிறது. அதாவது குடும்பத்தில் மாறிமாறி ஒரு சிலருக்கு உடல் நலங்கெட்டு விடுகின்றது. ஆகவே அனைத்துக் குடும்பங்களிலும் கசப்புச்சுவையுடைய அகத்திக்கீரை, பாகற்காய், சுண்டைக்காய், வேப்பம்பூ போன்ற உணவுப் பொருட்களை கலந்துண்டு வந்தால் ஒவ்வொருவரும் வாழ்நாளில் நோயின்றி வாழ முடியும். இறுதிவரை உழைக்க முடியும். மேலும், குடும்பங்களில் மருத்துவச் செலவே மறைந்துவிடும்.

ஆதாரம்: 'தெய்வீக மூலிகைகள்'

# தடுக்க வேண்டிய சிதைவுகள்

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்கும் தாக்குதல்களுக்கும் இலக்கான தமிழ்ப்பிரதேசங்களில் ஏற்பட்ட சகலவிதமான பாதிப்புகளிலும் மிகுந்த பரிமாணத்தைக் கொண்டது அவ்வப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைப் பாதிப்புதான்.

உயிரிழப்புகள்; உடைமை இழப்புகள்; வீடுகள், கட்டடங்கள் ஆகியவற்றின் சிதைவுகள் என்பனவற்றையெல்லாம் விட துயரமானதும் தொடர்விளைவுகளைக்கொண்டதும் இப்பகுதி மக்களின் வாழ்க்கைச் சிதைவுகள் தாம்.

ஒரு காலத்தில் - இழந்த உடைமைகளைக்கூட புதிதாக வாங்கிக்கொள்ளலாம். இடிந்துபோன வீடுகளையும் கட்டடங்களையும் கூட மீள உருவாக்கிக் கொள்ளலாம்.

சிதைந்து உருக்குலைந்து போய்க் கொண்டிருக்கும் மக்களது வாழ்வினை சீர்செய்து மீளவும் பழைய நிலைக்குக் கொண்டுவர முடியுமா என்பது ஓர் சோக வினாவாகவே மனதை உறுத்துகிறது.

வறுமையும், பட்டினியும், நிறைந்த வாழ்க்கை மட்டுமல்ல நிரந்தர இருப்பிடம் கூட இல்லாத நிலை.

இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத நிலையும் அதனோடு இணைந்த வறுமையும் பல சீரழிவுகள், சமூக ஒழுங்கீனங்கள், குற்றச் செயல்கள் என்பன எதிர்காலத்தில் தோற்றம் பெற காரணிகளாக அமையும்.

தென் தமிழீழத்தில் வாழும் பல தமிழர்கள் தங்களது சொந்த இருப்பிடங்களை பறிகொடுத்து விட்டு காடுகளில் வாழ்கின்றனர்.

எல்லைப்புற மக்கள் இராணுவ நெருக்கடியிலும் வறுமையின் கோரப்பிடியிலும் சிக்கி துன்பத்தின் எல்லைக்கே சென்று வாழ்வினை ஒரு பெருஞ்சுமையாக சுமக்கின்றனர்.

இராணுவம் ஆக்கிரமித்த யாழ்ப்பாண தீவுப்பகுதிகளிலும் பூனகரிபோன்ற இடங்களிலிருந்தும் இடம்பெயர்ந்த மக்கள் குடும்பம் குடும்பமாக யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள அகதிமுகாம்களிலும் நகரில் தாக்குதல்களுக்குள்ளாகி இடிந்து போயுள்ள கட்டடங்களுக்குள்ளும் முடங்கி வாழ்கின்றனர்.

தற்காலிகமாக சில வீடுகளில் தஞ்சம் புகுந்த சிலர் வசதியின்மையால் வேறு வீடு தேடி அன்றாடம் அலைகின்றனர்.

சொந்த வீடுகளில் வசிக்கும் மக்களே அரசின் பொருளாதாரத் தடைகளின் காரணமாக தினசரி வாழ்க்கைச் செலவிற்கு போராடிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில், சொந்த ஊர்களைவிட்டு வந்து இருப்பிடமின்றித் தவிக்கும் மக்களின் பொருளாதாரநிலை எவ்வாறான தாகவிருக்கும் என்பதை சிறிது கற்பனை செய்து பார்த்துக் கொள்ளலாம்.

இங்கு வீடுவீடாகச் சென்று கையேந்திநிற்கும் பல இளம் பெண்களையும், சிறு பிள்ளைகளையும் புதிதாகப் பார்க்கக்கூடியதாகவுள்ளது.

யாழ்ப்பாண நகரில் அதிகமாக - வைத்தியசாலைக்கு முன்பாகவும், கடை வீதிகளிலும் கோயில்களுக்கு முன்பாகவும் பல சிறு பிள்ளைகளை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.




—விவேக்

இச்சிறுவர்களில் அதிகமானோர் பத்து, பதின்மூன்று வயதுகளையுடைய பெண்பிள்ளைகளே. ஆண்பிள்ளைகள் குறைவு

இளம் பெண்கள் சிலர் 'கைக்குழந்தைகளுடன் வீடு வீடாக அலைகின்றனர்.

இவர்கள் இவ்வாறு அலைகையில் எமது 'சாளரம்' அலுவலகத்திற்கும் வருவதுண்டு. இந்த அனுபவங்களே இந்த நிலாமுற்றத்தில் இதனை எழுதத் தூண்டுதலாக அமைந்தன.

இவர்களின் கோலங்களைப் பார்க்கும்போதும் இவர்களின் கதைகளைக்கேட்கும் போதும் மனதிற்குள் உள்ள சோக நரம்புகள் மிகுந்த ஒலியுடன் ஒலமிடும்.

''தீவுப்பகுதியில் இருந்து வந்தநாங்கள். இரண்டு பிள்ளைகளோட அவர் விட்டுட்டுப் போய்விட்டார். நானும் வயதுபோன அம்மாவும் பிள்ளையளும் ஒவ்வொரு நாளும் சாப்பாட்டுக்கே கஷ்ரப்படுகிறம். பிள்ளைக்குப் பால்மா வாங்கிறதுக்கு ஏதாவது உதவி செய்யுங்கோ'' கண்களில் நீர் ததும்ப கைக்குழந்தையுடன் கையேந்தி நிற்கும் ஓர் இளம் பெண்.

''அப்பா மோசம் போயிட்டார். நானும் அம்மாவும் இரண்டு தங்கைகளும் பூநகரி பிரச்சனையோட இஞ்சை வந்தம் சாப்பிட ஏதெண்டாலும் தாங்கோ''

- இவ்வாறு இரந்துநிற்கும் பன்னிரண்டு வயதுச்சிறுமி.

இந்தக்காட்சிகளை இப்போது யாழ்நகரில் அடிக்கடி காணக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு திரிபவர்களில் - ஆண்கள், சிறுவர்களைவிட பெண்களும் சிறுமிகளும் அதிகம்.

இவ்வாறான இந்த ஆரம்பம் காலப்போக்கில் பல சீர் கேடுகேளுக்கு வழிவகுக்கும் என்பதனை எளிதில் எண் ணிப் பார்க்கக்கூடியதாகவுள்ளது.

வறுமைப் போராட்டத்தினால் ஏற்பட்ட இந்நிலை பின் னர் சுலபமானதோர் தொழிலாகவும் மாறக்கூடிய சாத்தியமுள்ளது.

ஓர் சிறுமி சொன்னாள் - தான் ஒருநாளைக்கு அறுபது எழுபது ரூபாவரை தேடிக்கொள்வதாகவும், இதன் மூல மாகவே தமது பெற்றோரும் சகோதரர்களும் சீவிப்ப தாகவும்.

இதிலிருந்து பார்க்கப்போனால் இன்னொரு விடயமும் புலப்படுகின்றது.

வறுமையில் வாடும் பாமர மக்கள் சிலர் தங்களது சிறு பிள்ளைகளை இவ்வாறு அனுப்பிவைத்து அதன் மூலம் தங்கள் நாளாந்த சீவியத்தை நடத்தப்பழக்கப் பட்டு வருகிறார்கள்.

இது ஓர் சமூக சீர்கேட்டிற்கான ஆரம்பநிலை என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடிய உண்மையாகும்.

தென்னிலங்கையில் கொழும்பு போன்ற நகரங்களில் இவ்வாறு சிறுபிள்ளைகளை பிச்சையெடுப்பதற்கு அனுப்பி அதன்மூலம் வாழ்நாளை கொண்டு செல்லும் உதிரிகளான மக்களை கண்டிருக்கிறோம்.

நகரின் மூலை முடுக்குகளிலும், சேரிப்புறங்களிலும் வீதியோரங்களிலும் வசிக்கும் இவர்கள் இன்னும் சீர் கேடான நடவடிக்கைகளிலும் தமது பிள்ளைகளை ஈடு படுத்தி வருகின்றனர்.

இதிலிருத்து ஓர் பயம் மனதைக் கவ்விக் கொள்கிறது எமது மண்ணில் - கிராமப் புறங்களில் இராணுவ அட் டூழியங்களால் இடம்பெயர்ந்து, இருப்பிடமற்று, வறு மையில் சிக்கித்தவிக்கும் பாமர மக்களின் நிலை இவ் வாறே தொடருமானால், இங்கும் பல சமூக சீர்கேடு கள் இடம் பெறலாம்.

இப்போதுள்ள இந்த நிலமைகளின் வளர்ச்சிப்போக்கு சீர்கேடான ஓர் முடிவுக்கு பாமரமக்களை இட்டுச் செல் வது என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்.

எமது மண்ணில் இவ்வாறானதோர் நிலை ஏற்படாமல் தடுத்து நிறுத்தவேண்டியது எல்லோரினதும் சமூகக் கடமையாகும்.

உயிரழிவுகள்கூட தவிர்க்க முடியாதவை. இவ்வாறான சீரழிவுகள் தடுத்து நிறுத்தப்படவேண்டியவை.

என்றாவது ஓர்நாள் இந்தமண் விடுதலை பெறும். இடிந்து போனவைமீண்டும்எழும். சிதைவுகள் மீளவும்உருப்பெறும்.

சமூகமானது ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றின் கட்ட மைப்பிலிருந்து சிதைந்து போனால் அதனை சீர்செய்து, மீள உருவாக்குவது என்பது முடியாத காரியமாகிவிடும்.

## கவிதை

# கைத்தொழில் காப்போம்

பஞ்சுபோல் நரையைப் பெற்று
பாட்டியும் நூலைச் சுற்ற
பிஞ்செனும் விரலால் சின்னப்
பிள்ளையும் வேலை செய்ய
நெஞ்செலாம் உழைப்பால் உயர்ந்து
நீட்டிய உடலைப் பெற்று
பஞ்சுநூல் ஆடை நெய்வோர்
பெறுவதோ மனிதநேயம்

மிதிபடும் பலகை மூலம்
விழுதுகள் இறங்கும் ஏறும்
அதன்வழி விரியும் பாவில்
இழைகளை நாடா பின்னும்
கதியென நெசவை நம்பி
கயிற்றினை இழுக்கும் போது
குதித்துக்கொண் டோடும் நாடா
தாளம் தப்பாமல் போகும்

தடியிலே சுற்றும் பாவை
தறியிலே விரியச் செய்து
மடிகளாய் நெய்யும் போது
பாவினைக் கறுக்கின்றார்கள்.
புடவையாய் மாறும் போது
நூலிழை அறுந்தால் சிக்கல்
உடை தர இழைகள் யாவும்
ஒற்றுமை நெறியில் செல்லும்

(சி. விநாயகமூர்த்தி)
தொகுப்பு - க. கனகராசா.
''கிராமராஜ்யம்''

# நிறத்தை நாம் எப்படி பகுத்தறிகிறோம்

மனிதனும் ஒரு சில குரங்கு வகைகள் மட்டுமே நிறங்களை அறியும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. பெரும்பாலான உயிரினங்களுக்கு நிறங்களைப் பிரித்து அறிய இயலாது என்பது உங்களுக்கு வியப்பாக இருக்கிறதா? நிறங்களை நாம் எவ்வாறு பிரித்து உணர்கிறோம். என்பதன் ரகசியம் விழித்திரையில் அடங்கியுள்ளது.

விழித்திரையிலே குச்சி வடிவ கூம்பு வடிவ பார்வை நரம்பு செல்கள் பல இருப்பன ஆய்வில் தெரிய வந்துள்ளது. பார்வைச் செல்களின் புறவடிவமைப்பைப் பொறுதது இவை இவ்வாறு அழைக்கப்படுகின்றன.

விழிலென்ஸ் குவியச் செய்யும் பிம்பம் இந்த ஒளி உணர் திறன் கொண்ட செல்களில் விழுகிறது. ஒரு கண்ணில் மட்டும் சுமர் 12 கோடி குச்சி செல்களும் 70 லட்சம் கூம்புச் செல்களும் உள்ளன என்றால் இந்தச் செல்கள் எத்துணைச் சிறியனவாக இருத்தல் வேண்டும் என்று யோசித்து பாருங்கள்.

குச்சி செல்களால் ஒளியின் நிறத்தை உணர முடியாது. குச்சி செல்கள் கருமையின் பல்வேறு சாயல்களில்தான் பிம்பங்களை உருவாக்க முடியும். கறுப்பு வெள்ளை நிழற்படம் போலவே இந்தப் பிம்பம் காட்சியளிக்கும். ஒவ்வொரு குச்சி செல்லும் ஒருவகையான நிறமுள்ள வேதிப்பொருளைக் கொண்டுள்ளது. இதற்கு ரொடாப்ஸின் (Rhodapsin) என்று பெயர். இதில் ஒளி பட்டதும் வேதிவினை நிகழ்ந்து சிறிய அளவு மின் சமிக்ஞைகள் உருவாகின்றன. குச்சி செல்களில் உள்ள வேதிப்பொருள்கள் எல்லா நிற ஒளிக்கும் தூண்டப்படும். கூம்புச் செல்கள் பிரகாசமான ஒளியில் தான் செயல்படும். மற்றும் நிறப் பார்வைக்கு இது அவசியமாகிறது குச்சிச் செல்கள் மங்கலான ஒளியில் தான் தூண்டப்படுகின்றன.

பொழுது சாயும் நேரத்தில் வெளியேயுள்ள பொருட்கள் எவ்வாறு தங்கள் நிறத்தை இழக்கின்றன. என்பதைப் பாருங்கள் ஏனெனில் இச்சமயத்தில் மங்கிய ஒளியால் செயல்படும் திறனுடைய குச்சி செல்கள் மட்டும்தான் தூண்டப்படுகின்றன. நிறமறியும் திறனுள்ள கூம்புச் செல்கள் குறைந்த ஒளியில் செயல்படா. ஆகவே பார்வையின் நிறம், உணரும் தன்மை குறைந்து விடுகிறது. கூம்பு செல்களில் மூன்று வகை உள்ளதாலேயே நம்மால் நிறங்களை வேறுபடுத்திக்காண முடிகிறது என அறிவியலாளர்கள் கருதுகிறார்கள். அடிப்படை நிறங்கள் எனப்படும் சிவப்பு, பச்சை மற்றும் நீல நிறங்களை உணரத் தனித்தனியாக மூன்றுவகைக் கூம்புச் செல்கள் உள்ளதாகக் கருதுகிறார்கள், இந்த அடிப்படை நிறங்களை வெவ்வேறு விகிதங்களில் கலந்தால் அனைத்து நிறங்களையும் பெறமுடியும்.

பச்சை வயல் வெளியைக் காண்கையில் பச்சைக் கூம்புச் செல்கள் மட்டுமே தூண்டப்படுகின்றன. மஞ்சள் வாளைப்பழத்தைக் காண்கையில் இரண்டுவகைக் கூம்புச் செல்கள் தூண்டப் படுகின்றன சிவப்பு மற்றும் பச்சை நிற வேதிப் பொருட்களையுடைய கூம்புச் செல்கள் தூண்டப்படுகின்றன. பச்சை ஒளியையும், சிவப்பு ஒளியையும் கலந்தால் மஞசள் ஒளி வருகிறது. இவ்வாறு பல்வேறு கூம்புச் செல்கள் ஒளியலைகளால் தூண்டப்பட்டு, ஒருங்கிணைவு நிகழ்வதாலேயே பல வர்ணங்கள் நமக்கும் புலனாகின்றன.

பல நிறங்கள் உடைய பிம்பம் விழித்திரையில் ஏற்படும் பொழுது இந்த நிறங்கள் மூன்று அடிப்படை நிறங்களாகப் பகுக்கப்பட்டு தனித்தனியே கூம்புச் செல்களால் உணரப்படுகின்றன. இத்தகவல்கள் பார்வை நரம்பு மூலம் நம் மூளையை சென்றடைகின்றன. கண்களில் விழித்திரையில் மஞ்சள் தானம் (Fovea) எனும் சிறிய பகுதியுள்ளது. ஒரு மில்லிமீட்டரே இதன் அளவு: இவ்விடம் முழுவதும் கூம்புச் செல்களே அதிகம் உள்ளன. நமது கண்கள் பிம்பத்தின் பல்வேறுபகுதிகளிலுள்ள நிறத்தை துல்லியமாகப் பகுத்கிறது. இத்தகவல் மூளையை சென்றடைகிறது மூளை பிம்பத்தின் சரியான நிறத்தை உணர்கிறது. இவ்வாறு தான் நாம் பொருள்களின் நிறத்தைக் காண்கிறோம்.

இந்த அமைப்பில் சிறிது பாதிப்பு ஏற்பட்டால்கூட பார்வைக் கோளாறு தோன்றும். கூம்புச் செல்கள் பாதிப்புக் குள்ளானால் நிறக்குறுடு மரபியல் நோயாகவும் ஏற்பட வாய்ப்புண்டு. ஆண்களில் இந் நோய் நூற்றுக்கு எட்டுப் பேருக்கும் பெண்களில் நூற்றுக்கு ஒருவருக்கும் காணப்படுகிறது என ஆய்வில் தெரியவந்திருக்கிறது.

—துளிர்

தொகுப்பு:- எல்லாளன்

''கற்கவேண்டும் என்று கவலை கொள்ளாதவனுக்கு நான் கற்பிக்க மாட்டேன். விசயங்களை தானாகவே தெளிவாக்கிக் கொள்ள முயலாதவனுக்கு நான் விளக்க முற்பட மாட்டேன் நான் கால்பகுதியை விளக்கிய பிற்பாடு ஏனைய முக்காற் பகுதியையும் வீடு சென்று தானாகவே சிந்தித்து அதனை உணர்ந்து கொள்ளாதவனுக்கு நான் மேலும் கற்பிக்கும் சிரமத்தை எடுத்துக் கொள்ள மாட்டேன்''

— கொன்பூயுசிக்

## வாத்தியார் வீட்டு விறாந்தை

### 'மகாவம்சப் புளுகு'

இன்று எல்லோரும் நேரத்துக்கு வந்துவிட்டோம். வழமைபோல வாத்தியார் சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருக்கிறார். விறாந்தையில் விரித்த பாய்களில் நாங்கள் இருக்கிறோம்.

சங்கக்கடைச் சண்முகராசா உரையாடலை ஆரம்பித்தார்.

''என்ரை கடைக்கு முன்னாலை இண்டைக்குக் கொஞ்சப் பெடியள் கதைச்சுக்கொண்டு நிண்டவை ஒருத்தனைப் பாத்து இன்னொருத்தன் 'உன்ரை கதை மகாவம்சப் புளுகுக்கு மேலான புளுகாக இருக்குது' எண்டு சொன்னான். அதென்ன வாத்தியார் மகாவம்சப் புளுகு?''

வாத்தியார் ஒரு புன்முறுவலோடு ஆரம்பித்தார்.

''1980 ம் ஆண்டிலை 'கவ்த கொட்டியா' எண்டு ஒரு சிங்களப் பிரசுரம் வெளிவந்தது. 'யார் புலி' எண்டது அதுகின்ரை தமிழ்க் கருத்து. சிறில் மத்தியூதான் அந்தப் பிரசுரத்துக்குச் சூத்திரதாரி. சிறில் மத்தியூ ஆரெண்டு தெரியுமோ உங்களுக்கு?''

''ஜே ஆரின்ரை அமைச்சரவையிலை இருந்த மோசமான சிங்கள இனவெறியன். 1983இலை தமிழருக்கு எதிராக நடந்த கலவரத்துக்குக் காரணகர்த்தா.'' கமலநாதன் பதிலளித்தான்.

''இதுகளைப் பிறகு கதைப்பம் வாத்தியார். இப்ப மகாவம்சப் புளுகைப் பற்றிச் சொல்லுங்கோ'' செல்லையா அண்ணர் அவசரப்பட்டார்.

''கொஞ்சம் பொறு செல்லையா. இரண்டுக்கும் தொடர்பிருக்குது. 2500 வருடங்களுக்கு மேலான தொடர்ச்சியானதும் ஆவண ரீதியானதுமான வரலாறு சிங்கள இனத்துக்கு இருக்குதெண்டும், அதன்படி இலங்கை முழுவதும் சிங்களவருக்கே சொந்தமெண்டும் அந்தப் பிரசுரம் சொல்லுது. மகாவம்சம் தான் அதிலை சொல்லுற ஆவணம். மகாவம்சத்திலை வரலாறு எண்ட பேரிலை பொய்யான விசயங்கள் தான் கனக்க இருக்குது. அதாலை தான் அந்தப் பெடியன் மகாவம்சப் புளுகு எண்டு சொல்லியிருக்கிறான்.''

''மகாவம்சம் இலங்கையின் ஆதி வரலாற்றைக் கூறும் நூல் எண்டுதானே வாத்தியார் நாங்கள் படிச்சிருக்கிறம்.'' நான் சொன்னேன்.

''அது பிழையான படிப்பு. மகாவம்சம் கி. பி. 6ம் நூற்றாண்டிலை எழுதப்பட்டது. அது ஆதிகால வரலாற்றை எந்தவித ஆதாரமும் காட்டாமல் உபகதை சொல்லுறது போலை சொல்லுது. அதோடை, ஒவ்வொரு அத்தியாய முடிவிலையும் 'மதத்தலைவர்களின் உயர்வான ஆனந்தத்துக்கும் மனவெழுச்சிக்குமாகத் தொகுக்கப்பட்டது' எண்டும் சொல்லியிருக்குது. வரலாறு வேறை. சிலரின் மனச்சந்தோஷத்துக்காகக் கதை சொல்லுறது வேறை. மகாவம்சம் ஒரு வரலாற்று நூலல்ல.''

வாத்தியார் ஒரு சிட்டிகை மூக்குப் பொடியை உறிஞ்சியபின் தொடர்ந்து கதைத்தார்.

''அடுத்ததாக மகாவம்சம் சொல்லிற விசயங்களுக்கு வருவம். விஜயன் இலங்கைக்கு வந்தது பற்றின கதை பிரதானமானது.''

''அது பொய்யோ?'' - செல்லையா அண்ணர்.

''பொய்தான். சிங்களவரே பொய் எண்டு சொல்லுகினம். கலாநிதி சேனக பண்டாரநாயக்காவைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறியளோ? அவர் ஒரு சிங்களவர். தொல்லியல் ஆய்வாளர். விஜயனின் கதை 'பூர்வீகம் பற்றிய ஒரு கட்டுக் கதை' எண்டு நவீன ஆய்வாளர்கள் ஒத்துக் கொண்டுள்ளதாக அவர் சொல்லுறார். இந்தக் கதையிலை உள்ள முரண்பாடுகளும் இது ஒரு பொய்க்கதை எண்ட எண்ணத்தைத் தருகின்றன.''

'' என்ன முரண்பாடுகள் வாத்தியார்?''

''புத்தர் முதலாவது தடவை இலங்கைக்கு வந்த போது யக்கர்களைக் கிரிதீபத்துக்கு விரட்டியடித்தார் எண்டு மகாவம்சம் சொல்லுது. மகாவம்சத்தின்படி அதற்குப் பிறகு தான் விஜயன் இலங்கைக்கு வந்தான். அவன் வந்த போது யக்கர்களின் ஆட்சி நடைபெற்றது எண்டும் மகாவம்சம் தான் சொல்லுது. இது ஒரு முரண்பாடு. அடுத்ததைப் பாப்பம், புத்தர் இறந்து கொண்டிருந்தபோது விஜயன் இலங்கைக்கு வந்தானெண்டும். இலங்கையில் புத்த சமயத்தைப் பரப்பிப் பாதுகாக்கப் போறவன் அவனே எண்டு சொன்ன புத்தர் தனது தேவதாகணங்களில் ஒருவரான உப்பலாவண்ணர் மூலம் அவனுக்கு ஆசீர்வாதமும் பாதுகாப்பும் அளித்தார் எண்டும் மகாவம்சம் சொல்லுது. அதே மகாவம்சம் தான் இலங்கைக்குப் புத்த சமயத்தை அறிமுகப்படுத்தியவன் மகிந்தன் எண்டும் சொல்லுது. மகிந்தன் அசோகனின் மகன். புத்தர் இறந்து இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு தான் அசோகன் முடிசூட்டினான். இலங்கையில் புத்த சமயத்தைப் பாதுகாக்கிறதுக்கு விஜயன் வந்து இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு தான் அச் சமயம் இலங்

கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இது இன்னொரு முரண்பாடு.''

''இலங்கையின் பூர்வ குடிகள் சிங்களவரே எண்டு மகாவம்சம் சொல்லுறதும் அண்டப்புளுகு தானே வாத்தியார்.'' - கமலநாதன்.

"மகாவம்சம் அப்பிடிச் சொல்லுது. நடுநிலையான சிங்களவர் வேறைவிதமாகச் சொல்லுகினம். 'ஆதிவரலாற்றுக் காலத்திலிருந்தே-பெரும்பாலும் வரலாற்றின் கருநிலைக் காலத்திலிருந்தே இலங்கைத் தமிழர்கள் ஏதோவொரு விதத்தில் சிங்களவருடன் இத் தீவின் பங்காளிகளாக இருந்துள்ளனர்' எண்டு சேனக பண்டாரநாயக சொல்லுறார்.''

''மகாவம்சம் இப்பிடிப் பொய்யை எழுதினதுக்கான காரணம் என்ன?'' - உலகநாதனின் கேள்வி நியாயமானது.

''மகாவம்சம் எழுதப்பட்ட காலத்திலை நீர்ப்பாசன நடவடிக்கைகள் வளர்ச்சியடைந்திருந்தன எண்டு சுசந்த குணதிலக எண்ட ஆய்வாளர் சொல்லுறார், அது அரசுக்குக் கூடுதலான வருமானம் கிடைச்ச காலம். அந்த வருமானத்தை மேலும் வளக்கிறதுக்கும் அதை அரசு தன்னிச்சைப்படி செலவு செய்யிறதுக்கும் மத்திமப் படுத்தப்பட்ட அதிகாரம் தேவை. தென்னிந்தியப் படையெடுப்புகள் அதுக்குத் தடையாக இருந்தன. மக்களின்ரை பெருமளவான ஆதரவு அரசுக்கு இருக்கயில்லை.

5 ம் நூற்றாண்டின் சிங்கள உணர்வு தென்னிந்திய ஆக்கிரமிப்பாளருக்கு எதிராகச் சமூகத்தின் பிரதான சக்திகளை ஒன்றிணைக்கும் அளவுக்குப் பலமானதாக இருக்கவில்லை' எண்டு பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தன சொல்லியிருக்கிறார். இந்தச் சமூக சக்திகளை ஒன்றிணைச்சு அரசைப் பலப்படுத்த வேண்டிய தேவை மத நிறுவனங்களுக்கும் இருந்தது. ஏனெண்டால் அரச வருமானத்திலை ஒரு பகுதி மத நிறுவனங்களுக்கும் போனது. அவையின்ரை சொத்துகளுக்கும் வருமானங்களுக்கும் வரி இல்லை. இந்த வகையிலை தான், ஒரு புத்த பிக்குவாலை எழுதப்பட்ட மகாவம்சம் தென்னிந்திய எதிர்ப்பு மற்றும் சிங்கள இனத்தினதும் புத்த மதத்தினதும் மேலாண்மை ஆகிய கோஷங்களின்ரை அடிப்படையிலை சிங்கள சமூக சக்திகளை ஒற்றுமைப்படுத்த முனைஞ்சது. மகாவம்சத்தின்ரை தென்னிந்திய எதிர்ப்புக்கு இன்னொரு காரணமும் இருக்குது.''

''அதென்ன காரணம் வாத்தியார்?''

''தென்னிந்தியாவிலை செல்வாக்காக இருந்த புத்த சமயப் பிரிவு வேறை. இலங்கையிலை இருந்த பிரிவு வேறை. தென்னிந்தியாவிலை உள்ள புத்த சமயப் பிரிவு இலங்கையிலை வேரூண்ட விடக்கூடாது எண்டதும் மகாவம்ச ஆசிரியரின் நோக்கம்.''

''சங்கக் கடைக்கு முன்னாலை அந்தப் பெடியன் சொன்னதும் சரிதான்.'' என்றார் சண்முகராசா.

- ஞானகுரு -

## ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்

''ஆற்றுநகர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்; ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர் மேற்றே, உலகின் மெய்ந்நெறி வாழ்க்கை''

மேலே காணப்படும் பாடலடிகள் மணிமேகலையில் பாத்திரம் பெற்ற கதையில் உள்ளன.

கைம்மாறு செய்யும் வசதி படைத்தவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்போமானால் அவர்கள் அப்பொருளின் பெறுமதிக்குக் குறையாத வேறொரு பொருளை வேறொரு சந்தர்ப்பத்தில் எங்களுக்குத் தருவார்கள். எனவே, அத்தகைய வசதி படைத்தோர்க்குக் கொடுப்பது உண்மையான கொடையல்ல. அது கைம்மாறு எதிர்பார்த்துச் செய்யும் கொடை- அறத்துக்கு விலை பேசும் செயல். கைம்மாறு செய்ய இயலாதோரின் பெரும் பசியைத் தீர்ப்பவரே மேலானோர். மெய்நெறியோடு கூடிய வாழ்க்கை என்பதும் அதுவே.

விருந்து வைபவங்களுக்கும் இது பொருந்தும்.

பிறந்தநாள் விழா போன்ற வைபவங்களில் விருந்துக்காகப் பெருமளவு பணம் செலவாகின்றது. பெரும்பாலும் வசதி படைத்தவர்களே இத்தகைய விருந்துகளில் கலந்து கொள்கின்றனர். இது உண்மையான அறநெறி வாழ்முறை அல்ல.

இத்தகைய வைபவங்களில் செலவிடப்படும் பணம் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களுள் அல்லது அநாதைச் சிறுவர்களுள் சிலரது ஒருவேளை உணவுத் தேவையையாவது பூர்த்தி செய்வதற்குப் பயன்படுமேயானால் அதுவே மேலானது. அதுவே உண்மையான அறம்.

—உருத்திரா —

# தீர்வுகாணும் நம்பிக்கையை குழந்தைகளிடம் வளரவிடுங்கள்

ஒரு பிரபல பத்திரிகை, பாடசாலைச் சிறுவர்களுக்கு என போட்டி ஒன்றை நடத்தியது. ஒரே சட்டத்தினுள் எத்தலைப்பின் கீழும் ஒரு கருத்துப்படம் (Cartoon) வரையவேண்டும். சிறந்த ஒன்று பத்திரிகையில் பிரசுரமாகும் என அறிவித்தது.

ஒரு இரண்டாம் வகுப்பு மாணவன், ஒரு கவலையுற்ற முகம் கொண்ட பூமிப் பந்தை வரைந்து "நான் சோர்வுற்றேன். நான் களைத்துவிட்டேன். தயவுசெய்து என்னைப் பாழ்படுத்தாதே." என்று அதற்குத் தலைப்பிட்டான். ஆறாம் வகுப்பு மாணவன் ஒருவன் சில குன்றுகளை வரைந்து "இதோ எங்கள் அதி உயரமான மலை." என்று மகுடமிட்டான். ஒரு மூன்றாம் வகுப்புச் சிறுமி, கட்டப்படும் ஒரு வீட்டுக்கு அருகில் சில மிருகங்கள் நின்று அழுவதையும் தூரத்தே புகைப்படலமும் அமைய வரைந்து "எங்கள் வீடுகள் திரும்பவும் எங்களுக்குத் தேவை" என்று தலைப்பிட்டாள். மற்றைய கருத்துப் படங்கள், நெல்சன் மண்டேலா, நிறவெறி என்ற சப்பாத்துக்களால் நசுக்கப்படுவது போலவும், ஒரு கட்டடம் எழுந்து கொண்டிருக்கும் பகுதியில் "மரங்களைக் காப்பாற்றுக" என மரங்கள் சொல்வதாகவும் அமைந்திருந்தன.

வெளிப்படையாகவே, பல பிள்ளைகள், உலகம் ஒரு கருணையற்ற இடம் எனப் பயமுறுத்தப்பட்டவர்களாக, பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வருகிறார்கள். மென்தோல் படைத்த மிருகங்கள் எல்லாம் கொல்லப்படுகின்றன. அழகிய பசுமரங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. காற்றை சுவாசிப்பது கூட ஆபத்தாக உள்ளது.

சிறந்த செயல் நோக்கச் சிந்தனை கொண்ட அநேக ஆசிரியர்கள் தமது மாணவர்கள் எதையும் அறிந்தவர்களாகவும் சுயமாக சிந்திப்பவர்களாகவும் மாறவேண்டும் என விரும்புகிறார்கள். ஆனால் உலகின் பிரச்சினைகள் பற்றி ஒரு அவசர உணர்வை ஊட்ட முயற்சிப்பதில் அவர்கள் தவறு செய்கிறார்கள். மாணவர்கள் இன்னமும் தம் சொந்த உடற் தூய்மையுடன் புரண்டுகொண்டிருக்கையில் உலகளாவிய சூழல் விவகாரங்களில் ஈடுபடுவது அவர்களால் முடியாத காரியம். பாடசாலைக்குள் அச்சுறுத்தல்களுடன் போராடும் போது சர்வதேச இனப் பிரச்சினைகளை அவர்களால் விளங்கிக் கொள்ள முடியாது.

அத்தகைய சுமையான பிரச்சினைகளால் அவர்கள் வெறுப்பும் அச்சமும் அடைகின்றனர். ஆசிரியர் ஒருவர் தொடர்ந்து வற்புறுத்தி வந்தால் மாணவர்கள் அவரை அமைதிப்படுத்த, சுலபமாக பொருத்தமான சொற்களைச் சொல்லிவிடுகிறார்கள். கல்லூரி வகுப்புகளில் முறைமையாக, தீர்வுகள் இல்லை என்ற நம்பிக்கையுடனோ அல்லது, அவர்கள் தேடும் பதில் கிடையாது என்ற நம்பிக்கை இழந்த நிலையில், முதல் பாதி நம்பத்தக்க தீர்வுகளில் தொங்கியபடி, மாணவர்கள் மாற்று வழிகளைத் தேடி தம் மனதை மூடிக்கொள்கிறார்கள்.

பிரச்சினைகள் இருக்கவில்லை என்பது போல் ஆசிரியர்களும் பெற்றாரும் வேடம் போடவேண்டும் என்பது இதன் அர்த்தமல்ல. பிள்ளைகளின் ஆர்வத்தை, வளர்க்க நாம் துன்பங்களை ஏற்றாக வேண்டும்.

எங்கள் 6-7 வயதுப் பிள்ளைகளை அசிட் மழைக்கு முகங் கொடுக்கப் பழகிக்கொள்ள தயார்படுத்த வேண்டுமென்றால் முதலில் ஒரு 30 கலன் நீர்வாழ் காட்சிப்பெட்டியை எப்படி கவனிப்பது என்பது பற்றி கற்பிக்கவேண்டும். உலகின் சதாம் ஹுசேன்களை அவர்கள் கையாளத்தயாராக வேண்டும் என்று நாம்விரும்பினால் தமது மதிய உணவுக்கான பணத்தை வற்புறுத்திக் கைப்பற்றும் அல்லது தமது (பாடசாலை) வீட்டு வேலையைப் பிரதிபண்ணிக் கொடுக்கக் கேட்கும் சிறிய கொடுமையாளனாக வளரவிடுங்கள். இவை, அவர்கள் தீர்வு காணத் தயாராகும் சில பிரச்சினைகளில் சில வகை. தமது நாட்டுக்கு மேல் பயங்கரவாதிகள் ரசாயனக் குண்டுகளை வெடிக்க வைத்தால் அல்லது தமது உணவு விநியோகம் சீரமைக்க முடியாதபடி அசுத்தப்படுத்தப்பட்டால் என்ன செய்வீர்கள் என அவர்களைக் கேட்போம்.

அச்சமூட்டப்பட்ட குழந்தைகள் உலகின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பெரியவர்களாக வளரப் போவதில்லை. தீர்வுகளைக் காண்பதில் ஒருவருக்குள்ள திறமையில் நம்பிக்கை வைப்பது அவசியம்.

எஸ். பி. கே.

உதவி - ரீடர்ஸ் டைஜஸ்ட்

---

நெப்போலியன் ஒவ்வொரு முறை போர்க்களத்திற்குச் செல்லும் போதும் பத்துப் பதினைந்து புத்தகங்களை கையோடு மறக்காமல் எடுத்துச் செல்வார். போரில் கிடைக்கும் ஓய்வுநேரங்களில் அனைத்தையும் படித்து முடித்து விடுவார். சிறு வயதில் அதிகம் படிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் நிறைய இருந்தது. அதை ஈடு கட்டி இறுதிவரை அறிவு நூல்கள் பலவற்றைப் படித்து தன்னை வளர்த்துக் கொண்டார்.

---

# இருட்டு...



காலையில் பாடசாலை செல்வதற்கு அவசர அவசரமாகத் தயாராக வேண்டியிருந்தது.

மிதிவண்டியை எடுத்துக் கொண்டு பாண் வாங்குவதற்காக விரைகிறேன்—

காங்கேசன்துறை வீதியில் எனது வாடிக்கைக் கடையிருந்தது. நேரம் காலை 7.15 மணியிருக்கும்

''அண்ணை இரண்டு றாத்தல் பாண் தாருங்கண்ணை. அண்ணை, அண்ணை........ பள்ளிக்கூடத்துக்கு நேரம் போகுதண்ணை ...'' இது என் குரல்.

''டேய் பாஸ்கரன் வாடா இங்கை. நிண்டு மிலாந்திறாய். பாண் ரெண்டு றாத்தல் குடோ...... சோம்பேறி. உசாரில்லாட்டா வீட்டை கலைப்பன் தெரியுமே......''

இது கடைக்காரனின் காலைக் கர்ச்சிப்பு.

பத்து வயதுடைய சகோதரன்... விழிகள் பிதுங்க... பயந்த நிலையில் கூனிக் குறுகிப் பாண்களை எனது பைக்குள் போடுகிறான்.

எனக்குப் பதின்னாங்கு வயது, அவனுக்குப் பத்து வயது...... கண்களில் சோகம்... கசங்கிய சேட்டு... பட்டன்கள் இல்லாமல் பின் குத்தியிருந்தான்.

சோக வடிவம்.

சிறிது நேரம் அவனைப் பார்க்கிறேன்.

இந்த மண்ணில் நானும் அவனும் அகதிகள்?

நான் பாடசாலைக்கு போக நேரம் போய்விட்டது. ஆனால் அங்கே நின்ற சகோதரன்... அவன் அடிமையா?...... இல்லை.

போராடப் புறப்பட்ட எம்மண்ணில் இப்படி அடிமைகள் இல்லையல்லவா ..... அப்படியாயின்...?

குழம்பிய மனத்துடன் வீட்டிற்கு வருகிறேன். அன்று முழுவதும் அந்தச் சகோதரன் எனது மனக் கண்ணில் நின்றான்—

அடுத்தநாள் காலையில் அதே கடை. அதே சகோதரன்... அதே சோகவடிவம். என் மனம் தாங்கவில்லை.

இன்று கடைக்கு வெளியே கூட்டிக் கொண்டு நின்றான்.

''தம்பி... தம்பி... உனக்கு என்ன பெயர்?'...'

''பாஸ்கரன்...'' மெதுவாகக் கூறியவன் எனது முகத்தைப் பார்க்கிறான்.

''நீங்கள் பள்ளிக்கூடம் போறேல்லையோ? .. என் கடையில் நிக்கிறியள்...?''

சிறிது நேரம் மௌனம்......

சிறுவனின் கண்கள் சிறிது கலங்கியிருந்தது.

''நான் பள்ளிக்குடம் போறேல்லை. அக்காவும் தங்கச்சியும் போறவையள்... நான் கடையில் வேலை செய்யிறன்.''

'உங்களை யார் கடையிலை சேர்த்தது?...

''நான் தான் சேர்ந்தனான்... வீட்டிலை சரியான கஷ்டம்...''

கூறிமுடிக்கு முன் முதலாளி...

''பாஸ்கரன் ..'' கெதியா வா சாமானைப் போடு......

பாஸ்கரனின் கைகளால் ஈழநாதம் பத்திரிகையும், பாணும் வாங்கிக் கொண்டு நடக்கிறேன் என் மனம் .. பாஸ்கரனை வட்டமிட்ட படியே வருகிறது.

விடுதலை ..!

நான் படிக்கிறேன் .. என்னைப் போன்ற எத்தனையோ சகோதரர்கள் அடிமைகள். இவர்களையும் படிக்க வைக்க முடியாதா?... இவர்களும் தமிழீழத் தாயின் பிள்ளைகள் தானே

நான் மட்டும் படித்தால் போதுமா...

எனது கேள்விகளுக்கு விடைகளை பெரியவர்களிடம் கேட்க விரும்புகிறேன். விடை கிடைக்கும் வரை எனது மனம் இருளாகவே இருக்கும்.

அ. ஜனார்த்தனன்
9ம் ஆண்டு
யாழ். இந்துக் கல்லூரி.

# தென்றலாக மாறவுள்ள சுற்றுச் சூழல்

அழுக்கடைந்த எரிபொருள்களிலும், வெளிநாட்டு எண்ணெயிலும் பல ஆண்டுகளாக தங்கியிருக்கும் அமெரிக்காவை அவற்றிலிருந்து விடுவிக்க உதவும் சக்தியாக தூய்மையானதும், நம்பிக்கையானதுமான காற்று விசையாளி (Windmill) விளங்கியது. மென்காற்று எப்படித் தாராளமாகக் கிடைக்கின்றதோ அதே போன்று இதில் இருந்து பெறும் சக்தியும் தாராளமாகக் கிடைத்துப் புதிய புதிய கைத்தொழில்களின் தேவையைப் பூர்த்தி செய்யுமென எண்ணப்பட்டது. அரசாங்க வரிச்சலுகைகளால் ஊக்குவிக்கப்பட்ட முதலீட்டாளர்கள் 1980 ம் ஆண்டுகளில் 2·5 பில்லியன் டாலர்களுக்கும் மேலாகக் காற்று விசையாளித் திட்டங்களில் முதலீடு செய்தனர்.

இருப்பினும் காற்றில் புதிய சக்தி இருக்கின்றது என்பது காலக்கிரமத்தில் உணரப்பட்டது. முந்திய வருடங்களில் இருந்த காற்று விசையாளிகள் போன்றில்லாது, தற்போதைய விசையாளிகளை நவீன தொழில்நுட்பத்தை உபயோகித்து திறமையானவையாகவும் அதிக பலனைத் தரத்தக்கவையாகவும் பொறியியலாளர்கள் அமைத்துள்ளார்கள். இவைபோலியல்லாததும், நம்பிக்கையானதுமென அமெரிக்க சக்திவளத்துறைத் (U. S. Dept of Energy) தலைவராக இருக்கும் திரு. மைக்கல் டேவிஸ் (Mr. J. Michael Davies) கூறுகின்றார். இப்போதுள்ள காற்று விசையாளிகள் அமெரிக்காவின் தேவையில் 10% சக்தியைக் கொடுக்கக்கூடிய ஆற்றல் உள்ளனவைகளாய் இருப்பதாகவும், இவற்றை மேலும் நவீனமயப்படுத்தினால் இன்னும் முப்பது வருட காலத்தில் இவை அமெரிக்காவின் தேவையில் காற்பங்கை பூர்த்திசெய்யும் எனவும் நம்பப்படுகின்றது. இந்தப் புள்ளிவிபரங்கள் காற்று விசையாளி உற்பத்தியாளர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியிருப்பதுடன் சர்வதேச உற்பத்தியாளர்களுக்கும் ஆர்வத்தைக் கொடுத்துள்ளது. காற்று விசையாளி பற்றி மதிப்பீடுகள் செய்யப்பட்டு, பரீட்சார்த்தத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாளைக்கு எண்ணைக் கிணறுகளாகச் செயல்படப் போகின்ற இவற்றை அமைப்பதற்கு அனுமதி பெறுவதற்கு அநேகர் போட்டியிடுகின்றார்கள்.

ஒரு நிக்கல் (Nickel) செலவில் ஒரு கிலோவாட் (Kilowatt) சக்தியை எண்ணெய்மூலம் உற்பத்தி செய்வதுபோல் காற்று விசையாளி மூலம் உற்பத்தி சேய்வதே இதன் நோக்கமாகவிருந்தது. கலிபோர்ணியா (California) வில் இயங்கி வரும் காற்று விசையாளி. இயந்திரங்கள் ஏழு பென்னிக்கு (Penny) ஒருகிலோவாட் சக்தியை உற்பத்தி செய்யக்கூடியனவாக இருக்கின்றன இடைவிடாது பெருங்காற்று வீசும் பிரதேசங்களில் 1995 ம் ஆண்டளவில் இவ்வியந்திரங்கள் ஐந்து பென்னிக்கு ஒரு கிலோவாட் சக்தியை உற்பத்தி செய்யக்கூடியதாயிருக்கும். மேலும் இந்த இயந்திரங்களை நவீன மயப்படுத்தினால் 2000 ம் ஆண்டளவில் இன்னுமொரு பென்னியைக் (Penny) குறைக்க முடியும். இந்தத் தொழில் நுட்பத்தைப் பாவிப்பதற்கு உள்ளூர் வாசிகளுக்கு போதியளவு காற்று இல்லாத போதிலும், இப்பொழுது இருக்கும் தொழில் துறையின் நிலப்பரப்பு இருபது மடங்காக விஸ்தரிக்கப்பட்டு, இந்தத் தொழில் இலாபகரமாக இயங்கும் எனத் தேசிய சக்தி ஆய்வுகூடத்தைச் சேர்ந்த நிபுணர்கள் கருதுகின்றார்கள்.

இதனுடைய வெற்றி ஒரு அரசியல் விவகாரமாக இருக்கின்றது. புதிய தொழில்நுட்பங்களை உபயோகித்து நவீன மயப்படுத்தப்படுவதும் தற்போது சுதந்திரமாக இயங்குவதுமான இந்தக் கைத்தொழிலில் அரசாங்கம் தலையிடுமா? இந்தக் கைத்தொழிலைப் புதுப்பிக்க வேண்டுமென எண்ணுவோர் இதற்கு ஆதரவாகவே இருப்பர். அமெரிக்க மத்திய அரசும் மாநில அரசுகளும் காற்று விசையாளிக் கைத்தொழில் உற்பத்தியாளருக்கு உதவியை வழங்காதிருப்பின், இத்துறையின் ஆராய்ச்சிக்கென அதிக பணத்தைச் செலவழித்த ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளின் கட்டுப்பாட்டிலேயே இந்தத்துறை இருந்திருக்கும். ஆனால் இன்று அமெரிக்காவே இத்துறையில் மேம்பட்டிருக்கின்றது.

1900 களின் ஆரம்ப காலத்தில் அமெரிக்காவிலுள்ள அநேகமான விவசாயப்பண்ணைகளுக்கு காற்று விசையாளி மூலமே மின்சாரம் பெறப்பட்டுவந்தது. 1930 களில் கிராமிய மின்சாரப்படுத்தும் நிருவாகம் (Rural Electrification Administration) கிராமப் புறங்களுக்கு மின்சாரத்தை வழங்கிய போது இவை கைவிடப்பட்டன. 1970களில் ஏற்பட்ட. எண்ணெய்த் தடையையும், எண்ணெயால் சூழலுக்கேற்படுகின்ற தீங்கையும் கருத்திற்கொண்டு எண்ணெய்க்குப் பதிலாக மாற்றுவழியைக் கண்டு பிடிப்பதற்கு அரசாங்கம் யோசித்தது. மாநில அரசாங்கங்கள் தங்கள் வருவாயில் ஒன்று தொடக்கம் இரண்டு வீதத்தை இத்தொழி

வின் ஆராய்ச்சிக்கு ஒதுக்கிய அதே வேளையில், அமெரிக்க அரசாங்கமும் இத்தொழிலை மீண்டும் ஆரம்பிப்பவர்களுக்கு வரிச்சலுகையும் அளித்தது,

காற்றினுடைய விசைக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய வகையில் விசையாளிகளை உருவாக்குவது பற்றி எதுவும் ஆராய்ச்சி செய்தவர்களுக்குப் புரியாதிருந்ததையே 1980 களில் இத்தொழிலில் ஏற்பட்ட தோல்வி எடுத்துக் காட்டுகின்றது. ஆரம்பத்தில் இக்காற்று விசையாளிகளில் பொருத்தப்பட்ட அலகுகள் (Blades) உலங்கு வானூர்தி (Helicopter) களுக்கு ஆரம்பத்தில் பொருத்தப்பட்ட அலகுகள் போன்றிருந்தன. ஒரு அலகின் ஒரு முனைக்கும் மற்ற முனைக்குமுள்ள காற்றமுக்கம் ஒரே சீராகவில்லாததால் காற்று விசையாளியின் சுழல்கருவி (rotor) பயங்கரமாக அசைந்தாடி இறுதியில் உடைந்தேவிடும். சடுதியாக வரும் கடுங்காற்றினால் ஏற்படும் அதிக சக்தியினால், சக்தியாக மாற்றமடையச் செய்யும் விசையாளி (Energy conventing turd-ine) எரிந்துவிடும். இந்தப் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்குப் பொறியியலாளர்கள் அதிக செலவில் பெரிய இயந்திரங்களைச் செய்தார்கள். அவை பெரும் செலவை ஏற்படுத்தியது.

எவ்வளவோ முயற்சிகளுக்குப் பின்னர், நீடித்து உழைக்கக்கூடிய வகையில் அலகின் நடுப்பகுதியைத் தடிப்பாக்கி இந்த அலகை ஆராய்ச்சியாளர்கள் திருத்தியமைத்தார்கள். காற்று வரும் திசையை அறிவிப்பதற்கும் சரியான, மாற்றங்களைச் செய்ய இயந்திரத்தைத் திருப்புவதற்கும் விசையாளியின் கோபுர உச்சியில் மின்னியல் சாதனங்களைப் பொறியியலாளர்கள் பொருத்தியுள்ளனர். இந்த மின்னியல் சாதனம் (Electronic sensors) ஒவ்வொரு மாற்றங்களையும் தெரிவிக்காது, கணனி (Computer) பதினைந்து பாகைக்குத் திருப்புமாறு காட்டுமாகில், இந்த மின்னியல் சாதனம் காற்றுப் பக்கம் திருப்பும்படி சமிக்கை செய்யும் காற்று விசையாளி உற்பத்தித் தொழிலில் முன்னணி வகிக்கும் அமெரிக்க நிறுவனமான கலிபோர்ணியாவிலுள்ள யூ. எஸ் வின்ட்பவர் ஒப் லிவர்மோர், (U. S. Windpower of Livermore) கடுங்காற்றினால் திடீரென ஏற்படுகின்ற அதிக சக்தி விசையாளியை செயலிழக்கச் செய்யாது பாதுகாக்கக்கூடிய காற்று இயந்திரங்களை மின்னியக்கச் சாதனங்களைப் பொருத்தி உருவாக்கியுள்ளது.

''நாங்கள் இந்தத் துறையை நல்லபலன் தரத்தக்க தொன்றாகவே கருதுகின்றோம்'' என சான் பிரான்சிஸ்கோ (San Francisco) வில் உள்ள பசுபிக் காஸ் அன்ட் எலக்ரிக் Pacific Gas and Electric) நிறுவனத்தின் ஆராய்ச்சித் துறைத் தலைவர் திரு. கார்ல் வெயின்பேர்க் (Mr. Carl Weinburg) கூறுகின்றார். கலிபோர்ணியா தவிர்ந்த ஏனைய மாநிலங்கள், முன்னர் இத்தொழிலில் ஏற்பட்ட இழப்புக்களின் பழுவை இப்பொழுதும் தாங்க வேண்டியுள்ளது. அமெரிக்காவின் மத்திய மேற்கிலுள்ள பத்து மாநிலங்களின் மின்சாரத் தேவையை காற்று விசையாளிகள் மூலம் பூர்த்தி செய்ய முடியும் என ஒரு அரசாங்க மதிப்பீட்டில் குறிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த மாநிலங்களில் 1992ல் பெரியளவிலான காற்று விசையாளிகளை அமைக்கும் திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

எரிபொருள் கழிவுகளின் காரணமாக சூழலில் மாசு ஏற்படுவதையிட்டு மக்கள் அதிருப்தி கொண்டிருக்கின்ற படியால் எரிபொருளுக்கு ஒப்பான புதிய சக்தியைப் பெற வேண்டுமென்ற நெருக்குதல்கள் அதிகரிக்கும். சூழல் மாசடைவதால் ஏற்படும் செலவீனத்தைச் சக்தியை உற்பத்தி செய்யும் செலவுடன் சேர்த்துக்கொள்ளுமாறு சில மாநிலங்கள் கேட்க ஆரம்பித்துள்ளன. சூழலில் மாசு ஏற்படுவதனால் ஏற்படுகின்ற செலவீனத்தை கலிபோர்ணியாவில் தற்பொழுது மதிப்பீடு செய்ய ஆரம்பித்திருப்பதுடன், மற்றைய சக்திகளுக்கு விதிக்கப்பட்டதைவி - 15% வீதம் குவைானவிலை காற்றாளி விசைமூலம் பெறும் சக்திக்கு விதிக்கப்பட்டுள்ளது.

இத்துறையில் ஏற்பட்டு வருகின்ற முன்னேற்றங்கள் மேலும் இந்தத் துறையைக் கவரச்செய்யும் நிலக்காற்றின் சீரற்ற தாக்கத்திலிருந்து இயந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ளவும், ஒரே சீரான காற்றைப் பெற்றுக்கொள்ளவும் கூடிய வகையில் சில பிரதேசங்களில் தற்போதுள்ள காற்றாளி விசைக்கோபுரங்களை உயரமான இடங்களில் அமைக்க பொறியியலாளர்கள் திட்டமிட்டு வருகிறார்கள். பாரமற்ற பொருட்களினால் கோபுரங்களை அமைப்பது செலவைக் குறைக்கும். சக்தி அதிகம் தேவைப்படும் வேளைகளிலும், காற்றில்லாத காலங்களிலும் பாவிப்பதற்காக, காற்றுக் காலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தேவைக்கு மிஞ்சிய சக்தியைச் சேமித்து வைக்கக்கூடிய வழிமுறைகளை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

எல்லாச் சக்தியிலும் பார்க்க காற்றால் பெறும் சக்தியே முதன்மையான சக்தியாக இந்த நூற்றாண்டின் இறுதியில் விளங்குமென்ற வேட்கை நிறைவேறாதுவிடின் அது தொழில் நுட்பத்தின் தவறல்ல. இதை உன்னத நிலைக்குக் கொண்டுவர ஆவன செய்யாதது சமூகத்தின் நெடுநோக்கிலுள்ள தவறேயாகும்.

—டிக் தொம்சன்

உருவகம்

# உயிரே உனக்காக

எச்சரிக்கை மணி ஓங்கி ஒலித்தது. நிணணீர்க் குழியங்கள் உசாராகிக் கொண்டிருந்தன. அந்தச் சுகதேகியின் உடலில் எங்கோ நோய்க்கிருமிகள் தொற்றியிருக்க வேண்டும். உடனே குருதியில் மிதந்து கொண்டிருந்த தாக்குதல் பிரிவுக்கு தகவல் பறந்தது. அப்பிரிவைச் சேர்ந்த நிணணீர்க் குழியங்கள் வைரசு எனப் பெயர் கொண்ட அந்த எதிரி நோய்க் கிருமியைச் சுற்றி வளைத்துக் கொண்டன. வைரசு வகையாக மாட்டிக் கொண்டது.

தப்ப வழியின்றித் தவித்த வைரசு நிணணீர்க் குழியங்களுடன் தந்திரமாகப் பேச்சுக் கொடுத்தது.

''ஏய் நிணணீர்க் குழியங்களே! என் வழியில் ஏன் குறுக்கிடுகிறீர்கள்; விட்டில் பூச்சிகளைப் போல வீணாகச் சாகப் போகிறீர்களா? விரைவாய் விலகி வழியை விடுங்கள்'' வைரசு இறுமாப்புடன் பேசியது.

நிணணீர்க் குழியங்களுக்கு தலைமை தாங்கி வந்த நிணணீர்க் குழியம் சிரித்தது... இன்னும் பெரிதாகச் சிரித்தது...

''என்ன வைரசாரே எங்கட தேசத்திலை வந்து நிண்டு கொண்டு எங்களையே வெருட்டுறீரா?''

வைரசு கேலியாக ''எது உங்கட தேசம். நேற்றைக்குப் பிறந்து இண்டைக்கு அழியிற உங்களுக்கும் ஒரு தேசம் இருக்குதோ?''

''ஏன் அதிலும் உனக்குச் சந்தேகமா. இந்த மனிசன்ர தேகம் தான் எங்கட தேசம், இதை உங்களைப் போல அந்நியர்களிடம் அடிமைப்பட விடாமல் காப்பாற்றுறது தான் எங்கட கடமை. அதுக்காக உயிரையும் விட நாங்கள் தயார்.''

வைரசு அதிர்ந்தது. ஆனாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் ''பாவம் நீங்கள் பரிதாபமா அழியப் போறியள். எங்கட இனத்திலை 'எயிட்ஸ் வைரஸ்' எண்டொருத்தன் இருக்கிறான். அவன் இஞ்சை வந்தானேண்டால் உங்களையெல்லாம் ஒரு நொடியிலை அடியோட அழிச்சுப்போடுவான்''

நிணணீர்க் குழியங்கள் அந்த வைரசை ஏறிட்டுப் பார்த்தன.

''ஓம் அவனை உங்கட மனவுறுதி எண்ட மருந்தாலை கூட வெல்லேலாது. அவ்வளவு பலசாலி அவன்.''

இப்படிச் சொல்லிக் கொண்டே அந்த வைரசு தப்பிச் செல்லப் பார்த்தது. அப்போ தலைமை நிணணீர்க் குழியம் மற்றவற்றை எச்சரித்த படியே முன்சென்று தாக்குதலைத் தொடங்கியது.

வைரசுக்கும் நிணணீர்க் குழியங்களுக்கும் கடும் யுத்தம் வெடித்தது. வைரசு பலமுனைத் தாக்குதலை மேற்கொண்டது. ஆனாலும் அதனால் வெல்ல முடியவில்லை. இறுதியில் வைரஸ் இறந்தது. சில இளம் நிணணீர்க் குழியங்களும் வீரமரணத்தை தழுவிக்கொண்டன.

ஒரு மாதிரி போர் ஓய்ந்தது. ஆயினும் பல நிணணீர்க் குழியங்களுக்கு ஒரு சந்தேகம். அந்த வைரசு கிளப்பிவிட்டுப்போன புரளி தான் அதற்கு காரணம். அச்சந்தேகத்தை தெளிவுபடுத்த அவசர கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது.

கூட்டத்தில் ஒரு இளம் நிணணீர்க் குழியம் ''அந்த வைரசு கூறியதெல்லாம் உண்மைதானா? அதைப் பற்றிய எங்களது நிலைப்பாடு என்ன?'' என்று தன் சந்தேகத்தை சுருக்கமாகச் சமர்ப்பித்தது.

முதிய தலைமை நிணணீர்க் குழியம் அமைதியாகப் பேசத் தொடங்கியது.

''இந்த மனிதரின் தேகம் தான் எங்கட தேசம். இந்த தேகத்திலை வாழுற உயிர்தான் எங்கட தேசத்தின்ர மக்கள். நாங்களோ இந்த தேசத்தின்ர காவலர்கள். இந்த தேசம், நீங்கள் குறிப்பிட்ட அந்நியனின் ஊடுருவலுக்கு ஆளாவதா? அவனுக்கு அடிமையாகி அழிவதா? என்பதை எங்கட தேசத்திலை வாழுற மக்கள்தான் தீர்மானிக்க வேணும். ஆனாலும் எங்கட தேசத்திற்காவும், எங்கட மக்களுக்காகவும், கடைசிவரை போராடுவதே எங்கட இறுதி இலட்சியமாகும்.'' இதைக் கேட்டுக் கொண்டிருந்த நிணணீர்க் குழியங்கள் வீறு கொண்டெழுந்தன. அவற்றுடன் சேர்ந்து அந்தத் தேகத்தின் உயிரும் சிலிர்த்துக் கொண்டது.

முத்து விஜயராகவன்

# பொது அறிவுப் போட்டிகள் ஏன் அவசியம்

சென்ற மார்ச் மாதம் தற்கொடையாளி (தியாகி) அன்னை பூபதி நினைவாக வடதமிழீழத்தில் பாடசாலை தோறும் பொது அறிவுப் போட்டி நடைபெற்றது. விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தால் நெறிப்படுத்தப்பட்ட இந்தப் போட்டியில் கூடுதலான மாணவர்கள் விண்ணப்பித்த இடத்தில், குறைவான மாணவர்களே சோதனைக்குத் தோற்றியிருந்தார்கள். அரசாங்கப் பொதுச் சோதனையில் முன்னணிப் பாத்திரம் வகிப்பதாகக் கூறப்படும் சில பாடசாலைகளில் கூட மிகக் குறைந்த விழுக்காட்டினரே விண்ணப்பித்துள்ளமை கவனத்துக்குரிய ஒருவிடயமேயாகும்.

இரண்டாவது வருடமாக நடத்தப்படும் இப் பரிசோதனையை அறிமுகப்படுத்துவது தொடர்பாக பரந்த தயாரிப்புகள் செய்யப்பட்டதைக் காணக்கூடியதாய் இருந்தது. அவ்விதம் இருந்தும் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை இவ்வளவு குறைவானதென்றால் அதற்கான காரணங்கள் என்ன?

இது பற்றி ஆய்வுகள் செய்த போது நடைமுறையில் சிற்சில தவறுகளும், அமைப்பாளர்கள் அதிபர்கள் ஆகியோரது சிற்சில கவனயீனங்களும் நடந்துள்ளதைக் காணக்கூடியதாய் உள்ளது. ஆனால் அதை இவ் எண்ணிக்கை குறைவிற்கான பிரதான காரணங்களாக கொள்ள முடியாது. காரணத்தை வேறு எங்கோதான் தேட வேண்டியுள்ளது. அது எங்கே? அவை என்னென்ன?

காரணங்களை ஆராயத் தொடங்குமுன்னர் வினாத்தாள் பற்றிய மாணவர்களிடையே நிலவும் பொது அபிப்பிராயத்தை அறிந்து கொள்ளுதல் அவசியமானது. சோதனைக்கு எழுதிய மாணவர்களின் பொதுவான அபிப்பிராயம் பொது அறிவு வினாத்தாள்களும், கட்டுரைக் கேள்விகளும் தமக்குப் புதியதொரு அனுபவமாக இருந்தது என்பதும் இதற்குரிய தயாரிப்புகள் தம்மிடம் போதியளவு இருக்கவில்லை என்பதுமேயாகும். குறிப்பிட்ட இப் பொது அறிவு வினாத்தாள்களை பார்வையிடும் சந்தர்ப்பம் ஆசிரியர்களுக்கு இல்லையாகையால் வினாக்கள் தொடர்பாக ஆசிரியர்களின் அபிப்பிராயம் எதுவும் வரவில்லை. ஆனால் கட்டுரைக் கேள்விகளைப் பற்றிய ஆசிரியர்களின் அபிப்பிராயம் மாணவர்களின் அபிப்பிராயத்திலும் விட வேறுபட்டதாகவே இருக்கின்றது. வினாக்கள் 'கடினமானவை' என்பதுவே அதுவாகும். 'கடினமானவை' என்ற பதத்தின் திட்டவட்டமான அர்த்தம் என்ன? கேள்விகள் குறிப்பிட்ட வயது மாணவர்கள் அறிந்திருக்க வேண்டிய பரப்பளவுக்கு அப்பாற்பட்ட விடயங்களாக உள்ளனவா? அல்லது, மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்களை அறிந்து கொள்வதற்கான தயாரிப்புகள் போதாமையென்பதா? வினாத்தாள்களையும் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகளையும் ஆய்வு செய்வதன் மூலமே இது பற்றிய தெளிவான பதிலைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இக் கட்டுரையில் பொதுமையமான காரணங்களில் ஒன்றை மட்டுமே நோக்குவோம்.

### முதலாவது காரணம்
### கல்வியும், அரசியலும்

புலிகள் இயக்கத்தின் அரசியல் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான பல்வேறு அம்சங்களுள், ''விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பும்'' ஓர் அங்கமாகும். ஆகவே இவ்விதமானதோர் அங்கத்தால் நடத்தப்படும் கல்விப் பரிசோதனையானது ஒருவகை 'அரசியல் திணிப்பாகவோ' அல்லது 'அரசியல் மூளைச்சலவையாகவோ' தான் இருக்கும் என்பதே பெரும்பான்மையோரின் அபிப்பிராயமாக இருந்தது. வினாத்தாள்களை ஆராய்வுக்கு உள்ளாக்காதோர்கள் இன்றும் அவ்விதமே கருதுகின்றனர். மாணவர்களும், பெற்றோர்களும் மாத்திரமல்ல கல்வியாளர்களுங்கூட இவ்விதமே எண்ணுகிறார்கள்.

இவ்விதமான அபிப்பிராயம் தோன்றியதற்கான காரணம் என்ன?

இன்றைய பாடசாலை நூல்களும், கற்கும் கல்வியும், நடத்தப்படும் பரீட்சைகளும், ஏனைய கல்வி நிறுவனங்களும் அரசியல் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது. அதற்கு உட்படாதது, சுதந்திரமானது என்பதுவே இன்றைய பொது அபிப்பிராயமாகவுள்ளது.

இது உண்மையானால் ஜனாதிபதியே உயல் கல்வி அமைச்சராக எப்போதும் இருப்பது எதற்காக? அரசாங்கங்கள் தத்தமது பொருளாதாரத் திட்டத்திற்கும் அரசியல் கொள்கைகளுக்கும் ஏற்ப கல்வித் திட்டத்தில் காலத்துக்குக் காலம் மாற்றத்தை ஏற்படுத்தி வருவது எதற்காக? திரிக்கப்பட்ட வரலாறுகள் பாடசாலை நூல்களாக மாறியது எவ்விதம்? வல்லரசுகளின் கைப்பொம்மையான ஐ. நா. சபையை பாடநூல்கள் அனைத்துலக பொது நிறுவனமாக சித்தரிப்பது சாத்தியமானது எவ்விதம்? தேசிய பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு அவசியமான பற்பல துறைசார்ந்த தொழிற் கல்வியும் தொழில் நுட்பக் கல்வியும் இன்றைய கல்வித் திட்டத்தின் 'தீண்டத்தகாத சாதியாக்கப்பட்டது' எவ்விதம்.

கல்வி அரசியலதிகாரத்துக்கு உட்பட்டது என்ற உண்மையையே இவை சுட்டிநிற்கின்றன. கல்வி அரசியலதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்ற கருத்து கபடத்தன

மான ஒரு மாயையாகும், எதுவித ஆதாரமுமற்ற ஒரு மூட நம்பிக்கை யாகும். இவ்வித மாயைக்குள் மூழ்கி உள்ளவர்கள், விடுதலைப் புலிகள் இயக்கத்தால் நடத்தப்பட படும் பொது அறிவுப் பரீட்சை என்றவுடன் ஒவ்வாமை நிலைக் குள்ளாகுகிறார்கள். இவ் விவகாரத்தை அவர்களால் எளிதில் ஜீரணிக்க முடியாத நிலையுள்ளது. பெற்றோர்களும், ஆசிரியர்களும் மாணவர்களை பரீட்சைக்கு தோற்றவைப்பதில் மிகமிகக் குறைவான ஆர்வமே காட்டியதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

அரசியல் அதிகாரம் இருக்கும் வரை 'கல்வி' அரசியல் அதிகாரத்துக்கு உட்பட்டதாகவே இருக்கும். இது தவிர்க்கவொண்ணா ஒரு தீங்கல்ல. மாறாக அவசியமானதொரு சமூக நியதியாகும்.

ஆகவே நாம் கவனத்தில் கொள்ள வேண்டியது, எவ்வித மானதொரு அரசியலதிகாரத்துக்கு உட்பட்டுள்ளது, எவ்விதத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது என்பதே யாகும். அதாவது யாரால்? எவ்விதம் என்பதுவே இங்கு கேள்வி யாகும்.

சிறிலங்கா அரசின் அரசியல் அதிகாரத்துக்குட்பட்ட 'கல்வி' இருக்கத்தக்கதாகவே, தமிழீழ தேசிய அரசின் அரசியல் அதிகாரத்துக் குட்பட்ட கல்வி ஒன்று தோற்றம் பெறுகிறது. இதுவே இங்கு நடைபெறும் உண்மை நிகழ்ச்சிப் போக்காகும். தமிழீழ தேசிய அரசின் அரசியல் அதிகாரம் தமிழீழ விடுதலைப்புலிகள் ஊடாக செலுத்தப் படுகிறது.

ஆகவே பொது அறிவுப் பரீட்சையை விடுதலைப் புலிகள் மாணவர் பேரவை நடத்துவது ஒன்றும் விசேடமானதோ, புதுமையானதோ, வழமைக்கு மாறானதோ அல்ல. இதைப் புரிந்து கொண்டு பரீட்சையின் உள்ளடக்கம் என்ன என்பதை ஆய்வுக்குட்படுத்தி, அதை செழுமைப் படுத்த முற்படுதலும், மாணவர்களை பெருமளவில் பங்குகொள்ள ஊக்குவிப்பதுமே சிறந்த பங்களிப் பாகும்.

2 வது காரணம்:-

உத்தியோகத்தை நோக்கமாகக் கொண்டு சோதனையில் அதிக புள்ளிகளைப் பெறுவதற்காக கற்பதே கல்வியாகும் என்பதே கல்வி சம்பந்தமாக நிலவும் பொதுவான கருத்தாகவுள்ளது. பதவி உயர்வுக்கும், உத்தியோகம் பெறுவதற்கும் அவசியமான கல்விச் சான்றிதழ்களைப் பெறுவது மாத்திரமே சோதனையின் நோக்கமாகக் கருதப்படுகின்றது. பார்த்தெழுதியோ, லஞ்சம் கொடுத்தோ, குதிரையோடியோ, மனனஞ் செய்தோ சோதனையில் சித்தியடைந்தால் போதும் என்பது இன்று பொது வழமையாக மாறி யுள்ளது.

நடந்து முடிந்த பொது அறிவுப் போட்டி பரீட்சை முடிவுகள் உத்தியோகத்துக்குப் பயன் படமாட்டாது எனக் கருதப்படுவதால் பெருமளவிலான ஆசிரியர்களும் பெற்றோர்களும் இச் சோதனையை எதுவித பலனும் அற்ற தொன்றாகவே கருதுகிறார்கள்.

அதிக புள்ளிகள் பெறுவதை மாத்திரமே நோக்கமாகக் கொண்ட கல்வித்திட்டமானது 'பொது அறிவு' என்பதைக் கூட மனனஞ் செய்யப்படவேண்டிய ஒரு நூற்கல்வியாக மாற்றிவிட்டது. தாவரவியலில் தாவரங்களின் பெயர்களை மனனஞ் செய்வது போல் 'பொதுஅறிவு' என் பதுவும் பெயர்கள், ஆண்டுகள், பரிமாணங்கள் போன்றவற்றை மனனஞ் செய்யும் ஒருவகை நூற் கல்வியாக மாற்றப்பட்டுள்ளது.

பொது அறிவு என்பது ஒருவகை நூற்கல்வியல்ல. அது திட்டவட்டமானதும், நிரந்தரமானதுமான பாடவிதானத்துள் இணைக்கப்பட்டதுமல்ல. பொது அறிவு என்ற விடயத்துள் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் இடைவிடாது தொடர்ந்து மாறிக் கொண்டேயிருக்கும். புதிய புதிய விடயங்கள் தோன்றிக் கொண்டேயிருக்கும்.

ஒய்வொழிச்சல் இன்றி தொடர்ந்து இயங்கிக் கொண்டேயிருக்கும் எமது சமூக சூழலையும் குறிப்பாக அரசியல் சூழலையும். இயற்கைச்சூழலையும், மனிதனின் அறிவு வளர்ச்சியையும் மேற் போக்காக புரிந்து கொள்ளலும், சமூகத்தின் அன்றாட பாவனைகளில் உள்ள பொருட்களின் செயற் பாடுகளைப் பற்றி மேற்போக் காக புரிந்து கொள்ளலுமே பொது அறிவு எனக் கூறலாம். இது பாடநூல்களுள் வரையறுக் கப்பட்ட தொன்றல்ல. பருவ வெளியீடுகள், புதினப் பத்திரிகைகள், ஏனைய மக்கள் தொடர்பு சாதனங்கள், பொதுக்கூட்டங்கள், சமூகத்தின் வெவ்வேறு மட்டத்தினருடனான உரையாடல்கள், பொது நடவடிக்கைகளில் மாணவர்களுக்கு உள்ள ஈடுபாடுகள் ஆகியவையே மாணவர்களின் பொது அறிவை வளர்ப்பதில் பங்காற்றுகின்றன. இவை தான் பொது அறிவை வளர்ப்பதற்கான மூலங்களாகும்.

ஆகவே ஒரு மாணவன் பாடசாலை விதானத்திற்குட்பட்ட நூற்கல்வி அறிவு மேலதிக கலைத் துறை நடவடிக்கைகள் (Extra Curicular Activities), பொது அறிவு, மிக ஆரம்பமட்ட தொழிற் கல்வியறிவு, தொழில் நுட்ப கல்வி அறிவு ஆகியவற்றை கலந்து தெரிந்து வளர்வதே வாழ்க்கைக் கான கல்வியாக அமையும்.

ஆனால் அதிகப் பெரும்பான்மையான பெற்றோர்களும், ஆசிரியர்களும் இவ் உண்மையை இன்

(18-ம் பக்கம் பார்க்க)

உடல் நலத்திற்கு நல்லது என எண்ணிக்கொண்டு சிலர் விட்டமின் குளிசைகளை அதிகமாக உட்கொண்டு வருகின்றனர்.

சளி, காய்ச்சல் என்று நாம் மருத்துவரிடம் சென்றால் அதற்கான மருந்துகளைத் தரும் போது, விட்டமின் பீ கொம்ளெக்ஸ் (B Complex) மாத்திரையையோ அல்லது விட்டமின் சத்துக்கள் அடங்கிய 'ரொனிக்'கையோ அதனுடன் சேர்த்து வழங்குகின்றனர். இதுவும் மக்களிடையே நிலவுகின்ற தவறான நம்பிக்கையைப் பலப்படுத்துகிறது.

# விட்டமின் மருந்துகள் கூடினால் ஏற்படும் விளைவுகள்

ஆனால், உண்மையில் இந்தப்பழக்கம்தீமை விளைவிப்பதாகவே உள்ளது. தேவைக்கு அதிகமாக விட்டமின்களை எடுத்துக் கொண்டால் அது கெடுதியையே உண்டுபண்ணும்.

நாம்தினமும் உண்ணும்உணவு சரி விகித உணவாக இருக்கும்வரை அதில் நமக்குத் தேவையான அனைத்து விட்டமின்களின் அன்றாடத் தேவையைப் பூர்த்திசெய்கிறது. விட்டமின் குறைவிறால் வரும் நோய்களுக்கு மருந்து-எந்த விட்டமின் குறைவோ அந்தவிட்டமினை மட்டுமே எடுத்துக் கொள்வதாகும். உதாரணமாக இரத்த சோகைக்கு (Pernicious) B12, பெரிபெரி நோய்க்கு B1.

வறுமையால் வாடுபவர்களும், சவலைநோயாலும் புரதச்சத்துக் குறைவாலும் பீடிக்கப்பட்ட குழந்தைகளுமே பொதுவாகப் பல விட்டமின்கள் குறைவைக் கொண்டுள்ளனர். இவர்களுக்கு வைத்தியம் - மாத்திரைகளாகத்தருவது அல்ல; உணவாகத் தருவதே சிறந்ததும், செலவு குறைவானதுமாகும்.

கண்மூடித்தனமாக அனைத்து நோயாளிகளுக்கும் பல விட்டமின்களின் கலவை மாத்திரைகளை சிகிச்சையாக எழுதிக் கொடுப்பது தேவையற்றதும், மருத்துவச் செலவை வீணாக அதிகப்படுத்துவதுமாகும் என்பதை மருத்துவர்களில் சிலர் பரவலாக உணர ஆரம்பித்திருக்கிறார்கள்.

சில விட்டமின்களை தினசரி அதிக அளவுக்கு மேல் உட்கொள்வதால் வரும் விளைவுகளை இங்கே காண்க.

| விட்டமின் | தினசரி தேவைப்படும் அளவு | அதிக அளவால் ஏற்படும் விளைவு |
|---|---|---|
| A | 70 மைக்ரோ கிராம்கள் | மனோவியாதி, மூளையில் நீர் கோர்ப்பதால் வாந்தி, சரும மாறுபாடுகள், முடி உதிர்தல், அரிப்பு. |
| B3 | 9-20மில்லி கிராம்கள் | குடற்புண், முடி உதிர்தல், அரிப்பு, கல்லீரல் சீர்கேடு, இரத்த அழுத்தம் குறைவு, அசாதாரண இதயத் துடிப்பு. |
| B6 | 2-3 மி. கி. | தசைகள் ஒத்துழையாமை புற உணர்வு நரம்புகளின் செயல் மாற்றம். |
| C | 35-60 மி. கி. | சிறு நீர்ப்பாதையில் கற்கள். |
| D | 400 1U | இரத்த அழுத்தம் உயர்வு, கல்சியம் உப்புகள் படிவதால் உடலுறுப்புக்களின் தசைகள் கெட்டியாகுதல், மூளையின் செயற்திறன் குறைவு. |

**பொது அறிவுப் போட்டி ஏன் அவசியம்...**

(17ம் பக்கத் தொடர்ச்சி)

னமும் புரிந்து கொள்ளாதது துக்ககரமானதேயாகும். இதைப் புரிந்து கொண்டு மாணவர்ளை அதற்கு ஒப்ப வழிநடத்தினால் மாணவர்கள் அபார பொது அறிவு மிக்கவர்களாக வாழ்வர்கள், நாடும் வளரும்!

சிறுகுறிப்பு:- அரசியல் அதிகாரத்துக்கு உட்படுவது என்பது வேறு விடயம். கல்வி நிர்வாகத்தில் அரசியல் வாதிகளும், அரசியல் அதிகாரிகளும் தலையிடுவது என்பது வேறு விடயம். முன்னையது அவசிய மானது. ஆனால் பின்னையதோ வெறுத் தொதுக்கப்படவேண்டிய தொன்றாகும்.

—லோகன்

# உலகத் திரைவானில் ஒளிரும் தாரகை!

— அ. யேசுராசா

புகழ்பெற்ற திரைப்பட நெறியாளரான சத்யஜித் ரே சென்ற ஏப்ரில் மாதம் கல்கத்தாவில் காலமானார். அப்பொழுது அவருக்கு வயது 71. உலகத் திரையுலகு, கலை மேதைமை நிறைந்த தனது அரும் புதல்வனொருவனை இழந்துவிட்டது. இந்திய நடுவண் அரசு தனது தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விட்டும், மேற்குவங்க அரசு ஒருநாள் விடுமுறை அறிவித்தும் இக் கலைஞனுக்கு அஞ்சலி செலுத்தின.



சேர்ஜி ஐஸன்ஸ்ரைன், D. W. கிரிபித், அகிரா குரோசாவா, இங்மார் பேர்க்மன் போன்ற உலகின் அதி சிறந்த திரைப்பட நெறியாளர் பதின்மரில் ஒருவராகச், சத்யஜித் ரே மதிக்கப்படுகிறார். திரை உலகின் பல்துறைப் பங்களிப்பிற்கான ஒஸ்கார் விருது, பிரான்சின் அதி உயர் விருதான லெஜன் து ஹொனர், இந்தியாவின் பத்மவிபூஷண், பாரத ரத்னா விருதுகள் ஆகியனவற்றை 'ரே' பெற்றுள்ளார். இறக்கும்வரை தான் உருவாக்கிய 30 முழுநீளக் கதைப்படங்களுக்காகவும் 5 விவரணப் படங்களுக்காகவும் பல்வேறு உலகத் திரைப்பட விழாக்களில், ஏராளமான பரிசுகளையும் அவர் பெற்றுள்ளார்.

வங்காளத்தில் புகழ்பெற்ற குடும்பமொன்றில் பிறந்த 'ரே', கலைச் சூழலில் வளர்ந்தார். கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் பொருளியற் சிறப்புப் பட்டதாரியாகிய பின்னர், தாகூரின் 'சாந்தி நிகேதனத்'தில் இரண்டரை ஆண்டுகள் ஓவியம் பயின்றார்; பிறகு விளம்பர ஓவியராக ஆங்கில நிறுவனமொன்றில் வேலைபார்த்தார்.

1947 இல் தான் ஆரம்பித்த 'கல்கத்தா திரைப்படக் கழகத்'திலும், 1950 இல் இலண்டனில் நான்கு மாதங்கள் வாழநேர்ந்தபோதும் பார்த்த நூற்றுக் கணக்கான பல்மொழிப் படங்களின்மூலம், தனது திரைப்பட இரசனையையும் அறிவினையும் வளர்த்துக்கொண்டார்; திரைப்படங்களைத் தானும் உருவாக்கவேண்டும் என்ற உணர்வும் இவரிடையே கருக்கொண்டது. இக்காலத்தில் இத்தாலியின் நவ யதார்த்தவாத திரைப்பட நெறியாளர்களான விக்ரோறியா டீ சீக்கா, றொசெல்லினி ஆகியோரின் படைப்புக்களால் ஆகர்ஷிக்கப்பட்டிருந்தார். இவரது ஆரம்ப காலப் படைப்புக்களில் இவர்களின் தாக்கத்தினை ஓரளவு அவதானிக்கலாம்.

வங்காள நாவலாசிரியர் விபூதிபூஷண் பந்தோபாத்யாயவின் பதேர் பாஞ்சாலி நாவலைத் திரைக்கதையாக 'ரே' தயாரித்தார்; ஆனால் ஒருவரும் அதனை வாங்கத் தயாராக இருக்கவில்லை. எனவே, தானே அதனைத் திரைப்படமாகத் தயாரிக்க முனைந்தார். தனது காப்புறுதிப் பத்திரத்தை அடகுவைத்தும், பெறுமதியான கலைப் புத்தகங்களையும் மனைவியின் நகைகளையும் விற்றுப் பெற்ற பணத்தைக் கொண்டும், 4000 அடி நீளம்வரை மட்டுமே அவரால் படமாக்க முடிந்தது. மேற்கு வங்க முதலமைச்சர் டொக்ரர் ரோய் செய்த பணஉதவி மூலமே மிகுதிப் படப்பிடிப்பு நடத்தப்பட்டுப், படம் பூரணமாக்கப்பட்டது. இப்படத்தை உருவாக்க 'ரே' க்கு இரண்டரை ஆண்டுகள் எடுத்தன.

நியூயோர்க் நகரிலுள்ள 'நவீன கலைகளுக்கான அரும்பொருட் காட்சியகத்' தில் நடைபெற்ற 'இந்தியத் திருவிழா' விலேயே முதன்முதலில் (1955 இல்), 'பதேர் பாஞ்சாலி' திரையிடப்பட்டது; பெரும்பாராட்டையும் பெற்றது. பின்னர்தான் கல்கத்தாவில் காட்டப்பட்டது.

புராணக் கதைகளையும், கற்பனா லோகங்களையும், நிஜவாழ்விலிருந்து விலகிய செயற்கைச் சித்திரிப்புக்களையும் கொண்டிருந்த இந்தியத் திரைப்பட மரபிலிருந்து விலகி, ஒரு சாதாரண வங்காளக் கிராமத்தையும் அதன் மனிதர்களின் வாழ்க்கையினையும் ஒரு குடும்பத்தின் மூலம், இயல்புநிறைந்ததாக - எளிமையுடன் - இத்திரைப்படமே முதன் முதலாகச் சித்திரித்

துக் காட்டியது. வறுமையிலும் வாழ்வில் நம்பிக்கை கொண்டு வாழும் கணவன் (ஹரிஹர்); வறுமைச் சுழலில் பொறுப்புச் சுமையுடன் தவிக்கும் மனைவி (சர்போஜயா); இவர்களது இரு பிள்ளைகள் (துர்க்கா, ஒபு); ஆதரவற்ற நிலையில் இக் குடும்பத்தை அண்டி வாழும் முதிய கிழவி (இந்திரா) ஆகியோரே முக்கிய கதாபாத்திரங்கள். அழுத்தும் வறுமையிலும் வாழ்க்கை நடைபெறுகிறது; மனித உறவுகள் மலர்ச்சி அடைகின்றன. அநாதைக் கிழவிமீது ஆதரவு காட்டப்படுகின்றது; கிழவியும் பரிவும் பாசமும் கொண்டவள் தான். தாய், பிள்ளைகள்மீது பாசமும் கண்டிப்பும் கொண்டவள். இயற்கையோடு ஒன்றிய சிறுவர்களின் குதூகலமும் (மழையும், வெளியைக் கடந்து செல்லும் ரயிலும், கிராமத்து நாடகமும் அவர்களை மகிழ்ச்சியிலாழ்த்துகின்றன), அவர்களின் சின்னச் சின்ன ஆசைகளும் தவிப்புக்களும், சகோதர பாசமும் அழகாகச் சித்திரிக்கப்படுகின்றன. எரிச்சற்பட்டாலும் வசைபாடினாலும், மனிதர்கள் என்றும் அப்படியே இருந்துவிடுவதில்லை. அவர்களின் நல்ல பக்கங்களும் அயலவர்கள் மூலம் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளன. மிட்டாய் வியாபாரி, பலசரக்குக் கடையில் ஒரே நேரத்தில் பாடசாலையையும் நடத்தும் ஆசிரியர் எல்லாம், நினைவில் தங்கும் பாத்திரங்கள்தான். இயற்கையின் வஞ்சிப்பு (பெருமழையில் வீடுகளின் அழிவு; துர்க்காவின் மரணம்) மனிதர்களைத் தாக்குவதன் துயரம், கனம் நிறைந்தது. வீட்டினைத் திருத்துவது, 'ஒபு'வை நல்லதொரு பாடசாலையில் சேர்ப்பது, புதியதும் சிறந்ததுமான நாடகங்களை வங்கமொழியில் எழுதித் தயாரித்துப் பரப்புவது, என்பதான ஹரிஹரின் ஆசைகள் நிறைவேறுவதில்லை. இடையில் துர்க்காவின் மரணமும் தாக்கியபோதும், அவர் நம்பிக்கை இழப்பதில்லை; புதியதொரு வாழ்வைத் தேடி குடும்பத்துடன் காசிக்குச் செல்கிறார். வாழ்வியக்கத்தின்மீதான ஈடுபாடும், நம்பிக்கையும்தான் படத்தின் மையச் செய்திகளாகின்றன.

நடிப்புத்துறைக்கு முற்றிலும் புதியவர்களின் இயல்பான நடிப்புடன்' ஓவிய அமைதிபேணி வடிவமைக்கப்பட்ட காட்சிச் சித்திரிப்புக்கள், மனதில் தாக்கமான பதிவினை ஏற்படுத்துகின்றன.

'ஒரு நாட்டுப்புறக் கவிதை' எனச் சிலாகிக்கப்படும் இப்படம், 1956 இல் கேன்ஸ் உலகத் திரைப்பட விழாவில் 'சிறந்த மனித ஆவணம்' என்ற விருதினைப் பெற்றது; இதுவரை பத்துக்கு மேற்பட்ட சர்வதேச விருதுகளையும் பெற்றிருக்கின்றது.

''பாத்திரங்களின் உணர்வுக் கொந்தளிப்புக்களே என்னைக் கவர்கின்றன'' என்று 'ரே' ஒருமுறை குறிப்பிட்டார் மனித உறவுகளையும், உள்ளார்ந்த உணர்வுகளையும் ஆழமாகச் சித்திரிக்கும் அவரது முக்கிய படங்களாக பதேர் பாஞ்சாலி, ஒபுசன்ஸார், சாருலதா, தீன் கன்யா, ஆரண்யேர் தின் ராத்ரி என்பன அமைந்துள்ளன.

சமூக, அரசியற் பிரச்சினைகளை அதன் இயல்பான தளங்களில் சித்திரிப்பதன் மூலம் பிரச்சினைகள் பற்றிய புரிதலையும், அதற்கான தீர்வு என்ன என்பதைப்பற்றிய தேடலையும் பார்வையாளரிடம் தோற்றுவிக்கலாம் என்பதில் 'ரே' நம்பிக்கையுடையவர்; ஆனால், பிரச்சினைக்குரிய தீர்வினை ஒரு படைப்பு கட்டாயம் சொல்லவேண்டுமென்பதை, ஏற்றுக் கொள்ளாதவர். நிலப்பிரபுத்துவத்தின் வீழ்ச்சியினூடு புதிய பணக்கார வர்க்கம் தோன்றுவதையும், நிலப்பிரபுக்களின் கலைகளைப் போஷிக்கும் தன்மையையும் சித்திரிக்கும் ஜல் சாஹர்; வேலையற்ற இளைஞனின் அவலங்கள், கொந்தளிப்புக்கள், வாழ்வின்மீது இன்னுமுள்ள நம்பிக்கைபற்றிச் சொல்லும் பிரதித் வந்தி; பாடசாலைகளையும் நூல்களையும் எரித்தும், அநீதிக்கெதிராகப் பாடும் கலைஞனையும் மாற்றுக் கருத்துள்ளவர்களையும் தனது அடிவருடியான விஞ்ஞானி உருவாக்கிய ஓர் இயந்திரத்தின்மூலம் தனக்குச் சாதகமானவர்களாக 'மூளைச் சலவை' செய்து மாற்றி அரசாளும், கொடிய அரசனுக்கெதிராக உருவாகி வெற்றிகாணும் மக்கள் கிளர்ச்சியினை, நீதிபோதனைக் கட்டுக் கதைப் (Fable) பாணியில் சித்திரிக்கும் ஹிரோக் ராஜர் தேஷே என்பன இவ்வகையில் அமைந்த - சமூக, அரசியல் உணர்வு கலாபூர்வமாக வெளிப்படும் - படங்களாகும்

கிழக்கத்தைய மேற்கத்தைய இசை அறிவு நிரம்பியவரான 'ரே', தனது 24 படங்களுக்குத் தானே இசையமைத்துமுள்ளார்; திரைப்பட இசைக்கான இவரது பங்களிப்பும் விமர்சகர்களால் பாராட்டப்படுகிறது.

வங்காள மொழியில் சிறந்த சிறுவர் இலக்கிய கர்த்தாவாகவும் 'ரே' மதிக்கப்படுகிறார். இவரது பத்திக்சந்த் என்ற சிறுவர் நாவல் தமிழீழ எழுத்தாளர் சொக்கனால் (ஆங்கிலத்திலிருந்து) மொழிபெயர்க்கப்பட்டு, நூல் வடிவில் வந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகத் திரைவானில் ஒளிரும் தாரகையான 'சத்யஜித் ரே' யின் உன்னதத் திரைப்படைப்புக்களின் வீடியோப் பிரதிகள் சேகரிக்கப்பட்டு, தமிழீழமெங்கும் பரவலாகக் காட்டப்படும் நிலைமை உருவாக்கப்படவேண்டும்; அதுதான் நாம் அவருக்குச் செய்யக் கூடிய பொருத்தமான அஞ்சலியாகும். ●

''கல்வி என்னுள்ளத்தில் உலகவாழ்க்கை எவ்வாறு நடைபெறுகிறது என்பதற்கும், எப்படி நடைபெற வேண்டும் என்பதற்குமிடையே கடுமையான போராட்டத்தை மூட்டிவிட்டது,,

-கார்ல் மார்க்ஸ்

# ராஜீவ் கொலை வழக்கு விசாரணை. மக்களின் செவிகள் ஏன் மூடப்பட்டன?

—சாரணன்—

ராஜீவ் காந்தி கொலை வழக்கு புறநகர்ப் பகுதியில் பலத்த பந்தோபஸ்துடன் ஆரம்பமாகியுள்ளது. விசாரணை விபரங்களை யாரும் வெளியிடக்கூடாதென நீதிமன்றம் விசேட தடை உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது. உத்தரவை மீறி அதனை வெளியிடும் எவருக்கும் ஒரு வருடச் சிறைத்தண்டனையும் ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்படுமென உத்தரவில் மேலும் கூறப்பட்டுள்ளது.

உலகில் மிகப்பெரும் ஜனனாயக நாடு என்று சொல்லப்படுகின்ற இந்தியாவில் பத்திரிகைகளுக்கும், மற்றும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களுக்கும் ஏன் இப்படி ஒரு வாய்ப்பூட்டு? ஒரு ஜனனாயக நாட்டில் விசாரணைகள் பகிரங்கமாக நடாத்தப்பட வேண்டும் என்றும், அவ்விசாரணை விபரங்களை மக்கள் மிகச் சுதந்திரமாக அறிய வழிவகை இருக்க வேண்டும் என்றும் ஒரு பொதுவிதி உண்டு. ஆனால் அதனை மீறி ராஜீவ் காந்தி கொலை வழக்குப் பற்றிய விபரங்களை மக்கள் அறியக்கூடாது எனத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இக்கொலையைப் புலிகள் தாம் செய்யவில்லை என மறுத்து வருகின்ற போதிலும் இந்திய அரசு புலிகள் மீதே இக்குற்றச் சாட்டைச் சுமத்தி ஈழத்தமிழர் பலரை விசாரணைக்கு உட்படுத்தியுள்ளது. விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டுள்ள பலரும் ஈழ மண்ணில் இந்திய இராணுவம் புரிந்த அனர்த்தங்களை வெளியிடுவர் என்பது எதிர்பார்க்கக்கூடிய ஒன்றே. இவற்றை இந்தியப் பத்திரிகைகள் நாளாந்தம் பிரசுரிக்கும் என்பதும் இயல்பே. அவ்வாறு பத்திரிகைகளில் ஈழ மக்களின் இன்னல்களும் இந்திய இராணுவம் புரிந்த அனர்த்தங்களும் வெளியாகிக் கொண்டிருக்குமாயின் அது ஒரு புறம் இந்திய அரசுக்கும், இந்திய இராணுவத்திற்கும் எதிரான உணர்வலைகளை இந்தியாவில் தோற்றுவிப்பதுடன், குறிப்பாகத் தமிழகத்தில் மத்திய மாநில அரசுகளுக்கு எதிரான உணர்வையும் தமிழ்த் தேசிய உணர்வையும் இது ஏற்படுத்தி விடும். அதாவது உண்மை சுடும் என்று ஆட்சியாளர் அஞ்சுகிறார்கள்.

ராஜீவ் கொலை பற்றிய குற்றப் பத்திரிகையைப் பார்க்கும் போது மனிதக்குண்டாய் நின்று ரஜீவைக் கொலை செய்த பெண் இந்திய அமைதிப் படையால் கற்பழிக்கப்பட்டவள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கற்புப் பற்றி அதிகம் பேசப்படும் இந்திய மண்ணில் இச்செய்தி இப்பெண்ணின் செயலுக்கு மக்கள் மத்தியில் நியாயம் கற்பிக்கும் என்பதில் சந்தேகமில்லை. விசாரணை வெளியிடப்படுமாயின் இது போன்ற பல்வேறு விபரங்களும் நாளாந்தம் தொடர்ந்து வெளிவருமாயின் அது அரசின் எண்ணத்திற்கு மாறாய் அமைந்துவிடும் என எண்ணி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது மக்களைத் தட்டி எழுப்பி அரசின் நோக்கத்திற்கு எதிரான புதியதோர் தீர்ப்பை மக்கள் கொடுக்கும் நிலையை உருவாக்கிவிடும் என்று அரசு அஞ்சியே இப்படி நடந்துள்ளது. □




வள்ளுவர் வழியில் வீரம் மானம் என்ற தலைப்பில் அண்மையில் நூலொன்று வெளிவந்துள்ளது. தமிழ்த்தாய் பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ள இந்நூலின் ஆசிரியர் திரு. நாக. பத்மநாதன்.

கைக்கடக்கமான இந்நூலில் 42 குறள்களுக்கு எளிமையான முறையில் விளக்கவுரை எழுதப் பெற்றுள்ளது.

"முயலைக் கொன்ற அம்பிலும் பார்க்க யானைக்கு வீசித்தவறிய வேலைத்தாங்குதல் இனிது, என வரும் திருக்குறள் அடியேனைப் பல்லாண்டு காலமாகக் கவர்ந்ததுண்டு. திருக்குறளில் உள்ள அன்பையும் அறத்தையும் நாம் விளங்கிக்கொள்ளும் அளவுக்கு இத் திருக்குறளில் உள்ள வீரத்தையும் மானத்தையும் நாம் கையாள்வதில்லை., அப்பகுதிகளை எடுத்துப் படிப்பது கூட இல்லை!

இந்த நிலையை மாற்றும் பெரும் திருப்பம் எம்முள் உடன் எழவேண்டும். குறள் கூறும் ஆற்றல், துணிவு, வீரம், மானம் ஆகியவற்றை நாம் மெய்யாக உணர வேண்டும். இதை எந்நாழும் நினைவாகக் கொள்ள வேண்டும்.''

இவ்வாறு நூலாசிரியர் தமது முன்னுரையில் சொல்கிறார். 'இனிய இளம் இதயங்களுக்கு சமர்ப்பணம், என்று குறிப்பிடப்பட்டுள்ள இந்நூல் கட்டாயமாக இளைஞர்களும் மாணவர்களும் வாசித்துப் பயன் பெற வேண்டிய ஒன்றாகும். விலை 20 ரூபா.

(22ம் பக்கம் பார்க்க)

செல்வி றாயி சிவலிங்கம்,
கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பளை

கே: 'பதினாறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க' என்று வாழ்த்துகின்றார்கள். அப்பதினாறும் எவை?

ப: துதி (புகழ்), வாணி (கல்வி), வீரம், விசையம் (வெற்றி), சந்தானம், துணிவு, தனம், மதிதானியம் (மதிப்பு மிக்க தானியங்கள்), சௌபாக்கியம், போகம், அறிவு, அழகு, புதிதாம் பெருமை (புதிது புதிதாகஉண்டாகும்பெருமைகள்), அறங்குலம் (தர்மம் பேணும்குலம்) நோவகல் (நோயின்மை), பூண்வயது (பூரண ஆயுள்)

''துதிவாணி வீரம்
விசையம் சந்தானம்
துணிவுதன மதி தானியம்
சௌபாக்கியம் போகம்
அறிவு அழகு புதிதாம் பெருமை
அறங்குலம் நோவகல் பூண்வயது
பதினாறு பேறும் தருவாய்
மதுரைப் பராபரமே''

— காளமேகப் புலவர் —

கல்மடு
செல்வதேவன்.

கே: இந்தியாவிலிருந்துதமிழ் அகதிகள் ஈழம் திரும்புவது பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: அவர்கள் திரும்பவில்லை. பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்படுகின்றார்கள்.

வி. நகுலன்
கோப்பாய்

கே: விடுதலைப் புலிகள் மீது கொண்ட பகைமையால் தமிழ் மக்களின் போராட்டத்துக்குத் துரோகமிழைப்பவர்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: மருமகள் மீது கொண்ட பகைமையால் மகனைக் கொன்று அவளை விதவையாக்க நினைக்கும் தாயைப் போன்றவர்கள்.

கபிரியேல்பிள்ளை கல்பனா,
கன்னியர்மடம் ம. வி.'
யாழ்ப்பாணம்

கே: சமூகத்தால் ஒதுக்கப்பட்டும் நசுக்கப்பட்டும் வரும் ஏழைகளின் வாழ்வு பற்றி உங்கள் கருத்து யாது?

ப: ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு.

கே: வெளிநாட்டு உழைப்பும் அதை எதிர் பாக்கும் வருங்கால சமுதாயமும் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

# பகலவன் பதில்கள்

ப; குருவிச்சை வாழ்வு.

ம. நிக்சன்
கொழும்புத்துறை

கே: பஞ்சமா பாதகங்கள் யாவை?

ப: கொலை, களவு, காமம், மது, பொய்,

நா. இந்திரகுமார்
யாழ்ப்பாணம்

கே: விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியா தடை செய்தது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ப: இந்திய அதிகாரவர்க்கம் உலகத் தமிழினத்துக்கு விலங்கிட முயல்கிறது.

வா. சேரன்
நுணாவில்

கே. அண்மையில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற படு கொலைகள் பற்றி?......

ப: கொலைகாரப் பேரினவாதிகளிடமிருந்து வேறு எதை எதிர் பார்ப்பது?

செ. றஞ்சிதமலர்
ஈச்சமோட்டை

கே: ஔவையாரின் பாடலொன்றில் ''அடகு என்று சொல்லி அமுதத்தை இட்டார்'' என ஒரு அடி வருகின்றது. அடகு என்றால் என்ன?

ப. கீரை

எஸ். காந்தஜெயன்
உரும்பிராய்

கே: இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு செயலற்றுப் போனால் அரசாங்கம் என்ன செய்யும்?

ப: காலத்தை இழுத்தடிப்பதற்கான இன்னொரு வழியைப் பற்றி யோசிக்கும்.

(21ம் பக்கத் தொடர்)

- கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது (குறள் 772)

முயலைக் கொன்ற அம்பிலும் பார்க்க யானைக்கு வீசி வெறுமனே வீழ்ந்த வேலுக்கே பெருமை உரியது!

முயல் வேட்டை வேண்டாம்! யானையை எதிர்க்கும் வீரனாய் நில்!

- உறுபசியும் ஓவாப் பிணியும் செறு பகையும் சேராதியல்வது நாடு (குறள் 734)

பசியினால் வருந்தாத அளவுக்கு வளம் உண்டு! நோயும் தொடர்ந்து இல்லை. மக்கள் மகிழ்வோடு வாழ்கின்றனர்! எனினும் நாட்டுக்கு இவை மட்டும் பாதுமா?

பகைவரின் படையெடுப்பு நேர்ந்தால் - நாடு அடிமை நிலைக்கு உள்ளானால் – வளம் எங்கே? மகிழ்வு தான் எங்கே? எனவே தான் -பகைவர் வரத்துணியாத படைபலமும் தேவை! இவை இணையப் பெற்றதே நாடு!

## தெறிப்பு

தனித்துவம் மிக்க ஓர் இதழாக சாளரம் மிளிர்ந்து வருகின்றது. தமிழீழ சஞ்சிகைகளின் வரலாற்றில் சாளரத்திற்கு முக்கியமானதோர் இடமுண்டு.

ஜெ . கோகுலன்
யாழ். இந்துக்கல்லூரி.

கடந்த மார்ச் ஏப்ரல் சாளரம் இதழின் அட்டைப் படத்தில் பெண்ணின் கண்களைக்கட்டியிருந்தமை விளங்கவில்லை. தயவு செய்து அதனை விளக்கவும்.

செல்வி . றாயி சிவலிங்கம்
கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பளை.

(ஆண் பெண் சமத்துவம் ஏற்பட்டு விட்டது என்று ஒரு சிலர் வாதம் செய்கின்றனர். வெளித்தோற்றம் அப்படி காணப்படினும், ஆணின் வழிகாட்டலிலேயே பெண் இயங்குகிறாள் - அப்படி நிர்ப்பந்திக்கப் படுகிறாள். அதனை விளக்கவே அவ்வாறு காட்டப்பட்டுள்ளது.)

அன்பின் சாளரமே, உன்பணி அளப்பரியது. ஆயினும். எதிர் காலத்தில் தொடர்ந்து இன்றைய சமூகம் எதிர்நோக்கும் சீர்கேடுகள் சம்பந்தமான ஆக்கங்களை அதிகம் வெளியிடவும்.

- கல்மடு செல்வதேவன்

ஓ... சாளரமே!
உன்னில் எத்தனை திறமைகள்! நாம் அறிவுப்பசியினால் அலையத் தேவையில்லாமல் போய்விட்டது. அரிய அறிவுணவாக சாளரம்! அடுத்தடுத்து உன்வரவினை எதிர் நோக்கி காத்திருக்கிறோம்.

- யோ. திவாகர்
வேலாயுதம் ம. வி.
பருத்தித்துறை.

மே மாத சாளரம் இதழில் வெளியான அனைத்து விடயங்களும் படிக்க சுவையானதாகவும், எளிமையானதாகவும் அதேவேளை, தரமானதாகவும் இருந்தன. சிந்திக்கத்தூண்டும் விடயங்கள் எளிமையான முறையில் சொல்லப்படுவது நல்லது என்பது எனது கருத்தாகும்.

கே. சிவாஸ்கரன்
தனங்கிளப்பு

## அரும்புகள்

### ஜனங்கள் நாய்களா?

'ஜனநாயகம்' என்ற பெயரில்
ஜனங்களை நாய்களாக எண்ணும்
அராஜகவாதிகள் பேரினவாதிகள்!
அவலங்களும் கண்ணீருமே நம்
அன்றாட வாழ்வு
இந்தக் கொடுமைகளுக்கும்
துயரங்களுக் ம்
முடிவொன்று வேண்டும்!

— அன்பரசி கணபதிப்பிள்ளை
அல்வாய் மேற்கு

### கல்வி

கற்கக் கற்க இனிப்பது கல்வி
கல்லாதவர்க்கு கசப்பதே கல்வி
இளமையில் கல்லில் எழுத்தாம் கல்வி
முதுமையில் கூட கற்பதே கல்வி
இளையவரும் முதியவரும் இணைந்தேவாழ
இளமைக்கும் முதுமைக்கும் பாலமாம் கல்வி

— ஜெயராசா கோகிலன்
இணுவில்

### இனியமொழி

உலகம் எங்கும் பரந்த மொழி
எங்கள் இனிய தமிழ் மொழியே!
நிலவான்போல் எட்டுத்திசையும்
சாட்சி தருவதும் தமிழ் மொழியே!
உலகம் எங்கும் சூழ்ந்து நிற்கும்
வற்றாக் கடலும் தமிழ் மொழியே!
பல பல சிறந்த புலவர்களால்
பாண்டித்தியம் பெற்றதும் தமிழ் மொழியே!
விலங்கை உடைக்க வேண்டுமென்று
வேங்கை எழுந்ததும் தமிழ் மொழியே!

ப. பரசுகன்
அல்வாய்

### ஒவியவாக்கியம் பதில்

நேற்றைய பொழுது எம்முன்
பிணங்களும் கண்களில் கண்ணீருமே!
நாளை அவை தொலைந்துவிடும்.

அடக்குமுறை ஒடுக்க
அனைத்து கரங்களும்
எழுந்து விட்டன.

தி. கரு
3 ம் கட்டை
யாழ்ப்பாணம்.

# குறை எங்கோ! பழி எங்கோ!

**வட** தமிழீழத்தில் பெரும்பாலான பாடசாலைகள் நடைபெறுகின்றன. மிகப்பெரிய போராட்ட சூழலிலும் பாடசாலைகள் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதில் தமிழ் மக்களின் தேசிய விடுதலை இயக்கம் அக்கறையாக இருக்கின்றது.

ஆண்டு 10 படிக்கும் மாணவர்களுக்கு சரியாக எழுதத் தெரியவில்லை; இது பரவலாக இருக்கும் குறைபாடு.

ஆண்டு 10 படிக்கும் மாணவர்க்கும், அவர் தம் ஆசிரியர்கட்கும் காவிரி நீர்ப் பிரச்சினை எந்த மாநிலங்களோடு தொடர்புடையது என்ற கேள்விக்கு பதில் தெரியவில்லை.

தாய் பூபதி பொது அறிவுத்தேர்வு விடைத்தாளில் இருந்து இவற்றை அறியக்கூடியதாக இருந்தது.

ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பது பொதுவான குற்றச்சாட்டாகும்.

ஆசிரியர்கள் பற்றாக்குறை உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. அதே வேளை ஆசிரிய வளங்கள் சரியாக பகிரப்படவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்.

ஆண்டு 10 படிக்கும் மாணவர்களுக்கு எழுதத் தெரியாததற்கும், அதே மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் காவிரி நீர்ப்பிரச்சினையானது தமிழ் நாடு, கர்நாடக மாநிலங்களுக்கு இடைப்பட்டது எனத்தெரியாமல் போனதற்கும் ஆசிரிய பற்றாக்குறை ஒரு காரணமில்லை.

ஆசிரியர்களின் அக்கறையின்மையும், கடமை உணர்வு அற்ற தன்மையுமே இதற்குக் காரணமாகும்.

பெற்றோர்களும் தம்மை அண்டியுள்ள பாடசாலைகளில் என்ன நடக்கின்றது என்பதிலோ தமது பிள்ளைகளின் கல்வியறிவு எந்த நிலையில் உள்ளது என்பதை அறிவதிலோ அக்கறை காட்டுவதில்லை.

பெற்றோர்கள் தம்பிள்ளைகளின் கல்வியிலும், அவர்கள் படிக்கும் பாடசாலைகளில் என்ன நடக்கின்றது என்பதிலும் கூடிய அளவில் அக்கறை எடுக்கவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட பகுதியினரின் கல்வி அறிவைக் கொண்டு எல்லோரினதும் கல்வி அறிவை கணிப்பது பிழையாகும்.

ஆசிரியர்கள் கடமையுணர்வோடு பாடங்களை படிப்பித்தல் வேண்டும்.

குறை எங்கோ இருக்க, அதை மறைக்கவும் கடமை தவறவும் போராட்டத்தை காரணம் காட்டுவது தவறான செய்கையாகும்.

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம்!
ஆனால்...

நாங்கள் உங்கள் உணவிற்கு மேலும் சுவையூட்டுகின்றோம்.
எமது நவீன சமையல் கலையகத்தில் உருவாகும் உணவுவகைகள்
எம் மண்ணில் பாரம்பரிய மூலப் பொருட்களைக்கொண்டு தயாராகின்றன.
ஒருமுறை எமது உணவகத்திற்கு விஜயம் செய்தால் உண்மை விளங்கும்.

நிறைவான சேவை
சுத்தமான, சுவையான உணவு

நாங்கள் சொல்லவில்லை! நீங்களே வந்து பரீட்சித்துப் பாருங்கள்.
வெளிநாட்டில் பயிற்சி பெற்ற
உணவுத் தயாரிப்பாளர்களின் ஆலோசனைகேற்ப
உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

இவை அனைத்தும் மனைக்கு வெளியே ஒரு மனையில் வழங்கப்படுகின்றது
எங்கே என்று அங்கலாய்க்கின்றீர்களா?

ஜோ. எக்கட்டனின்
ஜெசித்தாரா உணவகத்தில் கிடைக்கும்

ஜோ. எக்கட்டனின்
# ஜெசித்தாரா உணவகம்
## 19/3, கொழும்புத்துறை சாலை,
## சுண்டுக்குளி.
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)

எமக்கு தமிழீழத்தில் வேறு கிளைகள் இல்லை என்பதை
வாடிக்கையாளருக்கு நினைவு படுத்த விரும்புகின்றோம்

எல்லா வித மங்கள வைபவங்களுக்கும் உணவுக் கட்டளைகள்
24 மணி நேரத்தில் ஏற்கப்படும்

மறவாதீர்கள்
## ஜெசித்தாரா
நம்பிக்கையின் மறு நாமம் ஜெசித்தாரா

விளம்பரம் செனித்[illegible]

# ஓவியம் ⇄ வாக்கியம்



இது ஹிரோஷிமாவில் அணுகுண்டு வீச்சில் பலியானவர்களின் நினைவுச் சின்னம்!

இதற்கொரு கவிதை தாருங்கள்.